*தொடர் 8*

# *<u>கலாத்தியருக்கு எழுதின நிருபம்</u>*

*பாடம் 1.* நிருப அறிமுகம்

*பாடம் 2.* கலப்பற்ற நற்செய்தி போதனை

*பாடம் 3.* ஒரு நல்ல சாட்சியின் அடையாளங்கள்

*பாடம்4.* நீதிமானாக்கப்படுவது விசுவாசத்தினாலா? கிரியையினாலா?

*பாடம் 5.* கலாத்தியர் நிருபத்தில் சிலுவை

*பாடம் 6.* கலாத்தியர் நிருபத்தில் தூய ஆவியானவர்

*பாடம் 7.* கடவுள் தம் மைந்தனை ஏன், எப்பொழுது, எப்படி அனுப்பினார்?

*பாடம் 8* நீங்கள் எங்கே தவறி விட்டீர்கள்?

*பாடம் 9* பாவ இயல்பும் தூய ஆவியானவரும்

*பாடம் 10* நமது திட்டம், ஆபத்து, எதிர்பார்ப்பு

# பாடம் 1. நிருப அறிமுகம்

(வேதபாடம் கலாத்தியர் 1:1-5)

கலாத்தியாவிலுள்ள சபைகட்குப் பவுல் இந்தக் கடிதத்தை கி.பி. 57 இல் எழுதினார். அவர் கலாத்தியா பகுதிக்கு இருமுறை அருட்பணிப் பயணம் செய்தார். அப்படிப்பட்ட பயணங்களுள் ஒன்றில் அவர் அங்குச் சபைகளை நிறுவினார். அவர் நற்செய்தியைப் பிரசங்கித்த போது பேசின வார்த்தைகளைப் பரிசுத்த ஆவியானவர் ஆசீர்வதித்தார். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டனர். சபைகள் உருவாயின. விக்கிரகங்களை வழிபட்டு வந்த மக்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக அறிந்து கொண்டனர். பரிசுத்த ஆவியானவரால் மறு பிறப்பைப் பெற்றனர். பவுல் முன்னோடி அருட்பணியாளர். அவர் எப்பொழுதும் சுற்றித்திரிந்து நற்செய்தியை அறிவித்துப் புதிய இடங்களில் புதிய சபைகளை உருவாக்கி வந்தார். இருப்பினும் அவரது ஊழியத்தின் மூலம் மனமாற்றம் பெற்ற மக்களோடு தங்கி அதிக நேரம் செலவிட இயலவில்லை. ஒரு குறுகிய காலம் அவர் கலாத்தியாவிலே ஊழியம் செய்துவிட்டு வேறு ஊழியங்கள் செய்யப் போய் விட்டார். அவருக்குத் துக்ககரமான செய்தி ஒன்று வந்தது. ஒரு வேளை அவர் மக்கதோனியாவில் இருந்தபோது இது வந்தது. (அப்போஸ்தலர் 20:1-3) அது என்னவெனில் கள்ளப் போதகர்கள் கலாத்தியாவின் சபைகட்குள் புகுந்து விசுவாசிகளைத் தவறான வழியிலே நடத்தி, கள்ளப் போதனைகளைக் கொண்டு வந்தனர். தங்களது தவறான போதனைகளைப் புகுத்த அவர்கள் பவுலையும் தாக்கிப் பேசினர். பவுல், அப்போஸ்தலன் அல்ல எனவும், அவரது போதனை, ஆதாரமற்றது எனவும் கூறினர். இதைக் கேள்விப்பட்ட பவுல் ஆழ்ந்த கவலையுற்றார். உடனே அவர் உட்கார்ந்து. தமது கையினாலே இக் கடிதத்தை எழுதினார். கலாத்தியர் 6:11 படிக்கவும்.

மக்களின் கருத்துக்களைவிட, போதனை என்பது பவுலுக்கு மேலானது. வெளிப்படுத்தல் என்பது மனித ஊகங்களைவிட முக்கியமானது. கலாத்திய நாட்டுச் சபைகளில் பரவி வந்தத் தவறான போதனை எது? யூத போதகர்கள் எருசலேமின் அதிகாரத்தைப் பெற்றுள்ளதாகக் கூறி கலாத்திய புறஜாதி கிறிஸ்தவர்களை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக மாற்ற முயன்றனர். சில காரியங்களைச் செய்தாலன்றி அவர்கள் இரட்சிப்படைய முடியாது எனக்கூறி வந்தனர். குறிப்பாக அவர்கள் விருத்தசேதனத்தை வலியுறுத்தி வந்தனர் (கலாத்தியர் 5:1-6). இந்தக் கள்ளப் போதகர்கள் உள்ளான விசுவாசத்திற்குப் பதிலாக வெளிப்டையான அடையாளங்களை செய்ய விரும்பினர். கிறிஸ்தவ விடுதலைக்குப் பதிலாக நியாயப்பிரமாணக் கட்டுப்பாடு. சுத்தமான இருதயத்திற்குப் பதிலாகச் சடங்காச்சாரம். 'நம்மில் பலர் கலாத்தியப் போதனையில் வளர்க்கப்பட்டு, இன்று அதிலே வாழ்ந்து வருகிறோம்' என்று ஒருவர் கூறியுள்ளார். இது உண்மைதானே! கிறிஸ்தவர்களில் பலர் இரட்சிப்பு என்பது நற்கிரியைகள், சடங்குகள் ஆசாரங்கள் போன்றவற்றைச் சார்ந்தது என்று நினைக்கின்றனர்.

இது ஒரு அற்புதமான கடிதம். எழுத்தில் உணர்த்தமுடியாத வல்லமையான வாதங்களைச் சுருக்கமாகத் தெளிவாகக் கூறும் நிருபம் இது. 'கலாத்தியர் நிருபம் என் நிருபம். நான் அதை நிச்சயித்துள்ளேன். இது என் மனைவி' என்கிறார் மார்ட்டீன் லூத்தர்.

முதலாம் அதிகாரம் முதல் ஐந்து வசனங்களில் கூறப்பட்டுள்ள, நான்கு காரியங்களை நாம் பார்க்கலாம். இதிலே அப்போஸ்தலரது அறிமுகமும், வாழ்த்துரையும் உள்ளன

## 1. எழுதியவரின் விவரம்.

கலாத்தியர் 1:1,2, 6:11 படித்து கீழ்க்கண்டவற்றைக் காண்க.

<u>1. இதை எழுதியவர் பவுல்</u>. இதைப்பற்றி எவ்வித ஐயமும் இல்லை. இக்கடிதத்தில் அவரது கையெழுத்து உள்ளது. இன்னார் எழுதினது எனத் தமது பெயரைக் கூறி கடிதத்தை ஆரம்பிப்பது அக்கால வழக்கம். தமது சொந்தக் கையெழுத்தாலே இக்கடிதத்தை எழுதியதாகப் பவுல் கூறுகிறார். இதை அவர் கூற இன்னொருவர் எழுதவில்லை. அவரே எழுதினார். கலாத்தியாவிலுள்ள மக்கள் மீது அவர் கொண்டுள்ள அன்பையும், இருதயத்தின் கரிசனையையும் எவ்வளவாய் வெளிப் படுத்துகின்து!

<u>2. பவுல் தம்மை ஒரு அப்போஸ்தலன் என்று பறைசாற்றுகிறார்.</u> இந்தக் கள்ளப் போதகர்கள் அவரது அப்போஸ்தலத்துவம் குறித்துச் சந்தேகத்தைக் கிளறி விட்ட

*படியினால் இதை அவர் மிகக் கவனமாகக் கூறுகிறார். 'அப்போஸ்தலன்' என்பதற்குச் 'செய்தி கொடுப்பவன்', 'அனுப்பப்பட்டவன்' என்று பொருள் உண்டு. பவுல் எவ்வாறு அப்போஸ்தலனானார்? இதை வசனம் 1 இல் கூறுகிறார் கடவுள் மட்டுமே 'செய்தி கொடுப்போரை' உருவாக்க முடியும். தமது செய்தியாளனாக இருக்கும்படி கடவுள் பவுலை அழைத்த நிகழ்ச்சியை நாம் அப்போஸ்தலர் 26:15-18 வரை படித்து அறியலாம்.*

*<u>3. பவுல் சகோதரரோடிருந்து, இக்கடிதத்தை எழுதியனுப்பினார்.</u> பவுல் எப்போதும் நற்செய்தியில் தனது உடன் ஊழியரை மகிழ்வோடுஅங்கீகரித்து எழுதுவார். இந்தப் பெரிய ஊழியரின் தாழ்மையை இது வெளிப்படுத்துகின்றது.*

*<u>4. பவுல் தமது கடிதத்தை 'கலாத்தியா நாட்டிலுள்ள சபைகளுக்கு' என்று எழுதுகிறார்</u>. திருச்சபை என்பது ஒன்றே. ஆனால் மறுபிறப்படைந்த மக்களைக் கொண்ட ஸ்தலசபைகள் பல உண்டு. அவை 'சபைகள்' எனப்படும்.*

## *2. இரட்சகர் குறித்த வெளிப்பாடு*

*கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் கிறிஸ்துவைப் பற்றி நாற்பது தடவைகட்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முதல் ஐந்து வசனங்களில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நான்கு பண்புகள் வெளிப்பட்டுள்ளன.*

*<u>1. அவருடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.</u> வசனம் 3 இல், பவுல் 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து' என்று அவரைக் குறிப்பிடுகிறார். இயேசு = இரட்சகர்:; கிறிஸ்து = பரிசுத்தப்படுத்துபவர்; கர்த்தர் = அரசாளுபவர். அவருக்குரிய பதவியை அவருக்கே அளிக்க வேண்டும்!*
*<u>2. அவரது தெய்வீகத் தன்மை கூறப்பட்டுள்ளது.</u> வசனம் 1 இல் அவர் பிதாவோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளார். 'இயேசு கிறிஸ்துவினாலும்..... பிதாவாகிய தேவனாலும்......' எனவும் வசனம் 3 இல் 'பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்....' என்று மறுபடியும் கூறுகிறார். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கடவுள். சிறப்பான முறையில் அவர் கடவுளின் குமாரன். நாம் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று கலாத்தியர் 3:26 இல் காண்கிறோம். அவர் தேவகுமாரன். இப்பொழுதும், எப்பொழுதும் அவர் குமாரனாகிய கடவுள் என்பதில் ஐயமில்லை.*
*<u>3. அவரது தியாகம் குறிப்பிடப்பட்டுள்ளது.</u> இதை வசனம் 4 இல் காணலாம். அவரது தியாகம் 1) அவர் தாமாக, வலிய வந்து செய்தது - 'தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார் 2) நமது இடத்தை எடுத்துக்கொண்டார் . 'நம்முடைய பாவங்களுக்காக' 3) நம்மை விடுவிப்பதற்காக வந்தார் 'நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி' 4) வெற்றி சிறந்தார் '...பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே....'*
*<u>4. அவரது உயிர்த்தெழுதல் வலியுறுத்தப்பட்டுள்ளது.</u> வசனம் 1 இல் ஆண்டவர் இயேசு மரித்து, உயிருடன் எழுந்தார் என்று படிக்கின்றோம். நம்மை நீதிமான் களாக்க அவர் எழுப்பப்பட்டார் (ரோமர் 4:25) அவர் உயிருள்ளவராக இருக்கிறார் (எபிரெயர் 7:25) ஆண்டவரின் உயிர்த்தெழுதலை ஏன் பவுல் குறிப்பிடுகிறார்? ஏனெனில் பவுல் உயிருள்ள கிறிஸ்துவைக் காணவில்லை. ஆகவே அவர் அப்போஸ்தலனாக இருக்க முடியாது என்று இந்தக் கள்ளப் போதகர்கள் கூறி வந்தனர். ஆனால் பவுலோ உயிருள்ளவராகவே கிறிஸ்துவை கண்டார். அப்போஸ்தலர் 9:3-6 பார்க்கவும்.*

## *3. வாழ்த்துரை கூறல்*

*நாம் ஒரு நட்புக் கடிதம் எழுதினால் அதிலே வந்தனம் கூறி, வாழ்த்தும் கூறுவதுண்டல்லவா! அதையே பவுலும் செய்கிறார். வசனம் 3 பார்க்க. தம் நண்பர்கட்கு 'கிருபையும்', 'சமாதானமும்' உண்டாவதாக என்கிறார். நாம் யாவரும் பெறவேண்டிய ஆசீர்வாதங்கள் இவ்விரண்டுமே. இது நம்மை இரட்சிக்கும் கிருபை அல்ல - நம்மைக் காக்கும் கிருபையுங்கூட எனலாம் - 2கொரிந்தியர் 9:8, 12:9 பார்க்கவும். இது கடவுளோடு கொண்டுள்ள சமாதானம் அல்ல, கடவுள் அருளும் சமாதானம். (ஏசாயா 26:3; பிலிப்பியர் 4:6,7) நமக்குத் தேவையான ஆசீர்வாதங்கள் இவைகளே. கிருபையும் சமாதானமும்!*

## *4. ஆண்டவர் துதிக்கப்படுகிறார்*

*'அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக' என்று தமது அறிமுகத்தையும், வாழ்த்துதலையும் கூறி முடிக்கிறார். பின் ஆமென் 'அப்படியே ஆகட்டும்' என்கிறார். நாமுங்கூட இதையே கூறுவோம்!*

# பாடம் 2. கலப்பற்ற நற்செய்தி போதனை

*(வேதபகுதி - கலாத்தியர் 1:6-12)*

*பவுல், கலாத்தியா கிறிஸ்தவர்களைச் சந்தித்தபோது, கலப்பற்ற நற்செய்தியை (சுவிசேஷத்தை)ப் போதித்தார் என்று மார்ட்டீன் லூதர் கூறுகிறார். புதிய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் தோன்றும் பதம் 'சுவிசேஷம்' என்பதாகும். மாற்கு 1:1, ரோமர் 1:15, 1கொரிந்தியர் 1:17, 9:16, பிலிப்பியர் 1:5 ஐப் படித்து அப்போஸ்தலர் 20:24, 2கொரிந்தியர் 4:3,4, எபேசியர் 1:13, வெளிப்படுத்தல் 14:6 உடன் ஒப்பிட்டு நோக்குக. கலாத்தியர் நிருபத்தில் பன்னிரண்டு தடவைகட்கு மேல் 'சுவிசேஷம்' என்கிற பதம் வந்துள்ளது. இந்த வசனங்களை நாம் ஒப்பிட்டுப் படிக்கும்போது அவை நமக்குப் போதிக்கும் பாடங்கள் எவையென்று காணலாம்.*

*<u>1. கடவுளிடமிருந்து மனிதனுக்குக் கிட்டும் நற்செய்தியே சுவிசேஷம்.</u> சுவிசேஷம் என்ற பதத்திற்கு நற்செய்தி என்று பொருள். யோவான் 3:16 இல் சுவிசேஷத்தின் நற்செய்தி சுருக்கித் தரப்பட்டுள்ளது. வசனம் 17ஐயும் இத்துடன் இணைத்துப் படிப்பது முக்கியமாகும். உலகத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கவே கடவுள் தமது குமாரனை அனுப்பினார் என்று மக்களை நம்ப வைத்து சுவிசேஷத்தைக் கெட்டச் செய்தியாக்கப் பிசாசு முயலுகின்றான். இதுவும் தவறு. சுவிசேஷம் இவ்வுலகிற்கு எப்பொழுதும் நற்செய்தியாகவே உள்ளது. இது கடவுள் செய்த பெரிய செயலைக் கூறுகிறது. இது மனுக்குலத்திற்கென கடவுள் நடப்பித்த ஒரு அற்புதமான காரியத்தைக் கூறுகிறது. மீண்டும் யோவான் 3:16ஐப் படித்து ரோமர் 1:16, 1கொரிந்தியர் 15:1-4 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். சுவிசேஷம் மிகவும் நல்ல செய்தி. ஏனெனில் 1)அது இரட்சிப்பின் செய்தி - அதைப் பெறுவோர் மன்னிப்பு, பரிசுத்தம், சமாதானம், வல்லமை, பரலோகம் போன்ற யாவும் பெறுவர். 2) இது இலவசமானது. 3) இது யாவருக்கும் கிட்டும். 4) தகுதியற்றோருக்குரியது. 5) இது விசுவாசிப்போர் யாவருக்கும் விசுவாசத்தி னால் பெற்றுக்கொள்ளக்கூடியது.*

*<u>2. பல்வேறு தவறான சுவிசேஷங்கள் இருப்பினும் ஒரேயொரு மெய்யான சுவிசேஷம் உண்டு.</u> இந்தச் பாரத்தை மனதிற்கொண்டே அப்போஸ்தலன் இக்கடிதத்தை எழுதியுள்ளார். இந்தக் கிறிஸ்தவர்கட்கு அவர் மெய்யான சுவிசேஷத்தைப் போதித்தார். அதன் பின்பு கள்ளப் போதகர்கள் வந்து, 'வேறொரு சுவிசேஷத்தைப் போதித்து இளம் விசுவாசிகளை வழி தவறச் செய்தனர் - வசனங்கள் 6,7,8,9 படித்து ஒப்பிட்டுப் பார்க்கவும். கலாத்தியருக்குக் கள்ளப் போதகர்களால் பிரசங்கிக்கப்பட்ட இந்த 'வேறொரு சுவிசேஷம்' போலியானது. போலியான இந்த சுவிசேஷம், மெய்யான சுவிசேஷத்தைப் போலிருக்கும். ஆனால் அதில் உண்மை இராது. மதிப்பும் இராது. இன்று இவ்வுலகில் இது போன்ற 'வேறொரு சுவிசேஷங்கள்' எனப்படும் பொய்யான, சுவிசேஷங்கள் பல உள்ளன. மத்தேயு 7:15 இல் ஆண்டவர் இயேசு கூறியுள்ளதைப் பாருங்கள். 1தீமோத்தேயு 4:1-3, 2தீமோத்தேயு 3:1-5 இல் பவுல் கூறியுள்ளதையும் பாருங்கள். இந்தப் பொய்யான சுவிசேஷங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்:*

*<u>1. ரோமன் மார்க்கம்.</u> இங்கு சுவிசேஷத்திற்குப் பதிலாகத் திருச்சபை, மரியாள் வணக்கம், தூதர் வணக்கம், கிரியைகள் மூலம் இரட்சிப்பு போன்றவை இடம்பெறுகிறது.*

*<u>2. சடங்காச்சாரம்.</u> நாம் இரட்சிக்கப்படுவதற்குத் திருமுழுக்கு, திடப்படுத்தல், விருத்த சேதனம் போன்ற சடங்குகள் தேவையென்று கூறுவது இது.*

*<u>3. பகுத்தறிவு கோட்பாடு.</u> கடவுளின் சத்தியத்திற்குப் பதிலாக மனிதனின் கருத்து முக்கியத்துவம் பெறுவது. இது கடவுளின் வார்த்தை மேலானது என்பதை மறுதலித்து, இரட்சிப்பின் சுவிசேஷத்தின் பண்பை மட்டுப்படுத்துகிறது.*

*<u>3. சுவிசேஷம் உண்மையானது. ஏனெனில் இது மனித யோசனை அல்ல. கடவுளின் வெளிப்பாடு.</u> கலாத்தியர் 1:11,12 இல் அப்போஸ்தலன் கூறுவதைப் பாருங்கள். சுவிசேஷம் எங்கிருந்து வந்தது? இது மனிதனிடமிருந்து வந்திருந்தால், மனிதனைப் போன்றே இது பலவீனமாயும், தவறானதாயும், நம்ப முடியாததாயும் இருக்கும். கடவுளிடமிருந்து இது வந்திருந்தால், கடவுளைப் போன்றே நம்பிக்கைக்குரியதாயும், உண்மையானதாயும் இருக்கும். ரோமர் 1:1ஐ ஒப்பிட்டுப் படிக்கவும். அதிலே 'தேவனுடைய சுவிசேஷம்' என்கிற வார்த்தைகள், கடவுளிடமிருந்து வந்த சுவிசேஷம் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது. கடவுளே இதன் ஆக்கியோன். அவரே சுவிசேஷத்தின் மூலகாரணர். சுவிசேஷம் என்பது ஒரு மதம் அல்ல. அது ஒரு வெளிப்பாடு. இது மனிதனிலிருந்து ஆரம்பித்துக் கடவுளிடம் சேரும் வழி அல்ல. இது கடவுளின் உள்ளத்திலிருந்து தோன்றிய ஒன்று. பாவமுள்ள*

*மனிதனுக்கு வெளிப்படுத்தப்பட்டது. பவுல் தன்னுடைய சுவிசேஷத்தைக் கடவுளிடமிருநத்து பெற்றதாகக் கூறுகிறார். கலாத்தியர் 1:12 1கொரிந்தியர் 15:3,4 உடன் ஒப்பிடுக. இது பவுலின் சுவிசேஷம் அல்ல. இது மனிதன் உருவாக்கிய முறையல்ல. இது கடவுள் வெளிப்படுத்தின இரட்சிப்பு. ஆகவே இது உண்மையுள்ளது. மற்ற மதங்களை ஒப்பிட்டுக்கூற இயலும். ஆனால் கிறிஸ்தவம் ஒப்பிட முடியாதது. தனித்துவமுள்ளது. இது தனித்து நிற்பது. இதுவே கடவுளிடமிருந்து வந்த கடவுளின் வெளிப்பாடு. பவுல் இந்த மெய்யான சுவிசேஷத்திற்குத் தீவிரமான ஆதரவு தருவதில் வியப்பு ஏதும் இல்லையே!*

***4. பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கியாதவர்களைக் கண்டனம் செய்கிறார்.*** *கலாத்தியர் 1:7 இல் இவர்களைச் 'சுவிசேஷத்தைப் புரட்டுகிறவர்கள்' என்கிறார். அவர்களைப் பற்றி வசனம் 8,9 இல் அப்போஸ்தலன் கூறுவதைப் பாருங்கள். இது கடினமான வார்த்தைகள். மிகவும் கடினமானதா? இல்லை. தவறான செய்தியைக் கூறுவது என்பது பயங்கரமானது. அதுவும் ஆத்தும இரட்சிப்புக்குப் பதிலாக ஆக்கினையைக் கொண்டுவருவது எவ்வளவு பயங்கரம்! அடிக்கடி பிரசங்கிமார் இந்தத் தவறைச் செய்யும்போது, 'அவர்கள் உண்மையுள்ளவர்கள், நல்ல மனிதர், நாம் பொறுத்துக்கொள்ள வேண்டும், குறைகூறக் கூடாது' என்போம். ஆனால் ஒரேயொரு சுவிசேஷம் மட்டுமே உண்டு. ஆகவே நாம் இதற்குப் பதிலாக எதையும் போதியாமல், பிரசங்கியாமல் இருப்பதே முக்கியமானது. மக்களுக்குப் போலியான மருந்துகளைக் கொடுப்பது நாட்டின் சட்டத்திற்கு விரோதமானது. போலியான சுவிசேஷத்தைக் கொடுப்பது என்பது எவ்வளவு மோசமானது. மக்களின் சரீரத்தையல்ல, அது அவர்களது நித்திய சுகத்தையே கெடுத்து விடும். வித்தியாசமான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, நாம் அதற்கு எப்போதும் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும். யூதா 3 படிக்கவும்.*

***5. சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவேண்டும்.*** *கலாத்தியர் 1:8,9,11,23;2:2; 4:13 ஒப்பிட்டுப் படிக்கவும். ஏன் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவேண்டும் என்பதற்கு மூன்று முக்கியமான காரணங்கள் உண்டு.*

1. *சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கட்டளை பெற்றுள்ளோம். மத்தேயு 28:19*
2. *பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று - 1கொரிந்தியர் 1:21 படிக்கவும்.*
3. *நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கியாவிடில், சுவிசேஷத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளக்கூடிய மக்களுக்கு இரட்சிப்பின் பாதையை மறைக்கின்றோம். ஆம், நாம் சுவிசேஷத்தை வார்த்தையினால் மட்டுமல்ல, வாழ்க்கையின் மூலமாகவும் பிரசங்கிக்க வேண்டும். மத்தேயு 5:16, மாற்கு 5:19 படித்து ஒப்பிட்டுப் பார்க்கவும்.*

***6. சுவிசேஷம் யாவருக்குமுரியது.*** *இதை நாம் யாவருக்கும் பிரசங்கிக்க வேண்டும். யாவருக்குமுரிய ஒரே சுவிசேஷம்தான் உண்டு. ஏசாயா 45:22 படித்து லூக்கா 2:10,11, ரோமர் 10:11-15 உடன் ஒப்பிட்டுப் பார்க்க. யாவருக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வது எவ்வளவு அவசரமானது. மாற்கு 16:15*

***7. சுவிசேஷம் அடிக்கடி அதிக பலவீனத்தோடு பிரசங்கிக்கப்படுகிறது.*** *இதைப் பவுலடியார் கலாத்தியர் 4:13 இல் கூறுகிறார். அவர் கலாத்திய கிறிஸ்தவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது வியாதியாயிருந்தார். கடவுளின் ஊழியர் எத்தனைமுறை பலவீனத்தோடு சுவிசேஷத்தைப் பிரசங்கித்துள்ளனர்! சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது அவ்வளவு எளிதல்ல. ஏனெனில் நமக்கு வல்லமையுள்ள எதிரி ஒருவன் உண்டு. இதனால் மக்கள் அடிக்கடி சுவிசேஷத்தைக் கேட்க விரும்புவதில்லை. அதோடு அதைப் பிரசங்கிக்கிற மக்கள் சரீர குறைபாடுகளை மேற்கொள்ள வேண்டும். நாம் பிரசங்கம் செய்யும்போது நம்மையல்ல, நம் செய்தியையே மக்கள் கேட்கின்றனர் என்பதை எப்போதும் நினைவிற் கொள்ளவேண்டும். நாம் இந்தச் செய்தியை அழிந்து போகும் ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் எபேசியர் 6:18-20 படிக்கவும்*

# *பாடம் 3. ஒரு நல்ல சாட்சியின் அடையாளங்கள்*

*(வேதபகுதி - கலாத்தியர் 1:13-24)*

*பவுலடியார் ஒரு வேத பண்டிதர். சிறந்த பிரசங்கியார். இருப்பினும் அவர் தமது சாட்சியைக் கூறுவதில் அதிக விருப்பமுள்ளவராயிருந்தார். ஏனெனில் தனி நபரின் சாட்சி அதிக வல்லமை யுள்ளதென அவர் அறிந்திருந்தார். பிரசங்கம் மற்றும் வேதபாடத்தின் இடத்தைச் சாட்சி கூறுதல் ஒரு போதும் பிடிக்க முடியாது - 1கொரிந்தியர் 1:21 பார்க்க. போதிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தையை தனிநபர் சாட்சி உறுதிப்படுத்துகிறது. மன மாற்றமடைந்த ஒவ்வொருவரும் ஆண்டவர் தங்கள் வாழ்வில் நடப்பித்தவற்றை சாட்சியாகக் கூற ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும். சங்கீதம் 107:2, அப்போஸ்தலர் 4:20 படிக்கவும். சாட்சிகளிலும் நல்ல சாட்சி, கெட்ட சாட்சி என்ற வேறுபாடு உண்டு. நல்ல சாட்சிக்குரிய அடையாளங்கள் எவை?*

1. ***சுருக்கமாகவும், கருத்துள்ளதாயும் இருக்கவேண்டும். 'எழுந்து நில் - பேசு - வாயை மூடு' என்பது ஒரு நல்ல ஆலோசனையாகும்.***
2. ***நிச்சயத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கவேண்டும். பார்வை பெற்ற பிறவிக் குருடன் கூறிய சாட்சியைப் பாருங்கள் - யோவான் 9:25, 2தீமோத்தேயு 1:12 உன் ஒப்பிட்டுப் பார்க்க***
3. ***பழையதாக அல்ல, புதிதாக இருக்கவேண்டும். கடந்த காலத்தில் நமக்கு ஆண்டவர் செய்ததைக் கூறுவதில் மதிப்பு உண்டு. அதற்கும் மேலாக நமது அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நாளும் நமது இரட்சகர் செய்து வரும் புதிய காரியங்களைக் கூறுவது மேலானது.***
4. ***கிறிஸ்துவை மையமாகக் கொண்டதாக இருக்கவேண்டும். சாட்சி கூறும்போது நம்மைப் பற்றிக் கூறுவது இயல்பு. ஆண்டவர் நமக்கு என்ன செய்தார் என்று கூறுவது முக்கியம். அவருக்கே மகிமைச் செலுத்துவதாக இருக்கவேண்டும். யோவான் 3:30 படிக்கவும்.***
5. ***அது முழுக்க முழுக்க உண்மையுள்ளதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் சாட்சி கூறும்போது சிறிது மிகைப்படுத்திக் கூறுவதுமுண்டு. இது தவறு என்பதை மறக்கவேண்டாம்.***

*இவ்வுலகில் வாத விவாதங்களைவிட உண்மையான, உள்ளத்தைத் தொடும் தீவிரமான சாட்சியின் வார்த்தைகள்தான் மக்களை நம்ப வைக்கும். இதனால்தான் பவுலடியார் கலாத்தியருக்கு எழுதின தமது கடிதத்தில் தமது சாட்சியையும் கூறுகிறார். யூத மதத்தைச் சார்ந்த இந்தக் கள்ளப் போதகர்கள், திருச்சபைக்குள் நுழைந்து பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தைக் குறித்தும், அவர் தம்மை அப்போஸ்தலனாக கூறிக் கொள்வதைக் குறித்தும் சந்தேகத்தை எழுப்பி விட்டனர். ஆண்டவர் தம்மோடு நடப்பித்த கிரியைகளைப் பவுல் அவர்களுக்கு எடுத்துரைக்கிறார். அவர் தமது சாட்சியைக் கூறுகிறார். இதைக் கலாத்தியர் 1:13-2:14 வரை காணலாம். இக்கால நடைமுறைக்கேற்ப பவுலடியாரைச் சாட்சி கூறும்படி நாம் கேட்கலாமா?*

***1. நான் மத வைராக்கியமுள்ள வாலிபனாக, ஆவிக்குரிய நிலையில் குருடனாகவும், இழந்துபோன நிலையிலும், செத்தவனாகவும் இருந்தேன்.*** *வசனம் 13,14 இல் பவுலடியார் இதைக் கூறுகிறார். இருமுறை அவர் யூதமார்க்கத்தைப் பற்றிப் பேசுகிறார். தர்சு பட்டணத்து சவுல், மார்க்க முறைப்படி கண்டிப்பான முறையில் வளர்க்கப்பட்டார். எல்லாப் போதனைகளையும் நன்கு கற்றறிந்தார். எபிரெய மத பாரம்பரிய நியமங்கள், சடங்குகள், பழக்க வழக்கங்கள் யாவும் அறிந்திருந்தார். அப்போஸ்தலர் 26:5 படிக்கவும். இவ்வளவு வைராக்கியம் உள்ளவராகவும், மதப் பற்றுள்ளவராகவும் இருந்தாலும், சவுல் இரட்சிக்கப்படாத, ஆவிக்குரிய வாழ்வில் செத்த நிலையில் குருடனைப் போலிருந்தார். இன்றும் மக்கள் பலர் மதப்பற்றுள்ளவராயிருந்தும் இழந்துபோன நிலையில் இருக்கின்றனர்.*

***2. இயேசு கிறிஸ்து ஏமாற்றுக்காரர், கிறிஸ்தவம் என்பது பொய்யான மார்க்கம், கிறிஸ்தவர்கள் யாவரும் மாயக்காரர்கள் என்று நான் உறுதியாக நம்பி, ஆண்டவரை நேசித்து அவரைப் பின்பற்றும் யாவரையும் துன்புறுத்தத் துணிந்து செயல்பட்டேன்.*** *இதை வசனம் 13இல் நாம் காணலாம். பவுலை இது வேதனைப் படுத்தியிருக்க வேண்டும். ஆகவேதான் இதை எழுதுகிறார். எங்கெல்லாம் கிறிஸ்தவர்கள் இருப்பதாகக் கேள்விப் பட்டாரோ, அங்கெல்லாம் சென்று அவர்களைத் துன்புறுத்தி, வெறி கொண்ட படை வைத்துத் தாக்கினார். இதனால், தான் கடவுளுக்குத் தொண்டு செய்வதாகக் கருதினார். அப்போஸ்தலர் 26:9-12 படிக்கவும். இப்படிப்பட்ட மனிதனுக்கு ஏதாவது நம்பிக்கை உண்டா? ஆம் உண்டு! 1தீமோத்தேயு 1:12-15 பார்க்கவும். கடவுளின்*

*கிருபை இப்படிப்பட்ட மனிதனைச் சிறையாக்கி மாறுதலடையச் செய்தது. இதே கிருபை இன்றும் கிட்டுகிறது. செயல்படுகின்றது.*

***3. இவ்வாறு கடவுளின் பிள்ளைகளை நான் துன்புறுத்தி வந்தபோது திடீரென ஒரு அற்புதம் நேரிட்டது.*** *இந்த மனிதரின் வாழ்வில் ஆண்டவர் அதிரடியாக நுழைந்ததை நாம் வசனம் 15,16 இல் காண்கிறோம். இதைப் பற்றிய முழு விபரத்தையும் நாம் அப்போஸ்தலர் 26:13-16 இல் காணலாம். பவு**லி**ன் இரட்சிப்பில், கடவுள் நடப்பித்த நான்கு காரியங்களை இதில் பார்க்கிறோம். அவரது கிருபையினால் இரட்சிக்கப்படுவோரின் வாழ்வில் இன்றும் அவர் இவைகளை நடப்பிக்கிறார்.*

1. ***'என்னைப் பிரித்தெடுத்தார்'*** *(வசனம் 15) ஆண்டவர் எப்பொழுது பவுலைப் பிரித்தெடுத்தார் என்று கவனிக்கவும். எரேமியா 1:5, ரோமர் 8:29, எபேசியர் 1:3,4, 2:10 ஒப்பிட்டுப் பார்க்கவும். ஆண்டவர் நம்மில் அன்புகூர்ந்து, நம்முடைய இரட்சிப்பிற்கென நித்தியத்திலே திட்டமிட்டிருந்தார்.*

2. ***'தம்முடைய கிருபையினால் என்னை அழைத்தார்'****(வசனம் 15) அப்போஸ் தலர் 26:14 இதற்கு விளக்கம் எனலாம். பவுலின் வாழ்வில் நேரிட்ட இந்த அற்புதம் எவ்வளவு கிருபையுள்ளது! இதேபோன்று கிருபையினால் ஒவ்வொரு பாவியும் இரட்சிக்கப்படுவது என்பது எவ்வளவு அற்புதமான கிருபை!*

3. ***'அவர் தம்முடைய குமாரனை எனக்குள் வெளிப்படுத்தினார்'****(வசனம் 16) 'எனக்குள்' என்கிற வார்த்தையைப் பாருங்கள். தர்சு பட்டணத்துச் சவுலுக்கு ஆண்டவர் இயேசு தம்மை வெளிப்படுத்தினார் என்று அப்போஸ்தலர் 9:3-5 இல் படிக்கிறோம். அவருக்கு வெளிப்படுத்தினதோடு, அவருக்குள் வெளிப் படுத்தினார். ஆண்டவராகிய இயேசுவை தன் வாழ்வில் ஏற்றுக்கொள்பவனே ஒரு கிறிஸ்தவன் - யோவான் 1:12, 2கொரிந்தியர் 13:5, கலாத்தியர் 2:20, கொலோசெயர் 1:29 பார்க்க.*

4. ***வாழ்நாள் முழுவதும் நான் செய்ய வேண்டியதை எனக்குக் கட்டளையிட்டார்*** *(வசனம் 16). பவுல் ஒரு அயல்நாட்டு அருட்பணியாளராக வேண்டுமெனக் கடவுள் விரும்பினார். கடவுல் நமக்கெனத் திட்டமிட்ட வேலையை நாம் செய்கிறோமா?*

***4. நான் என் மனமாற்றத்தின் பின்னர் கடவுளோடு, தனித்திருக்க வனாந்திரத்திற்குச் சென்றேன்.*** *வசனங்கள் 16,17 இதைக் கூறுகிறது. பவுல் ஏன் இதை நமக்குக் கூறுகிறார்? ஆண்டவரிடமிருந்து தன் அப்போஸ்தலத்துவத்தைப் பெற்றுக்கொண்டபடியினால், எருசலேம் சென்று மற்ற அப்போஸ்தலரிடம் இதற்கென அங்கீகாரம் பெற தேவையேதும் இல்லையென்று பவுல் வலியுறுத்துகிறார். அரேபியாவில் மூன்று வருடம் என்ன நடந்ததென்று நமக்கு முழுமையாகத் தெரியாது. தன் வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய வேலைக்கென அவர் கடவுளிடம் காத்திருந்து, ஆயத்தம் செய்தார் என்று பலரும் கருதுகின்றனர்.*

***5. அரேபியாவிலிருந்து திரும்ப வந்து நான் மனமாற்றம் அடைந்த இடத்திற்கே திரும்ப வந்தேன்.*** *வசனம் 17 இல் இதைக் காணலாம். தான் முன்பு துன்புறுத்திய கிறிஸ்தவர்களைத் திரும்பச் சந்தித்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை! ஆண்டவர் தங்களுக்கு என்ன செய்தார் என்பதைத் தம் நண்பர்களிடம் சென்று தெளிவாகச் சாட்சி கூறுவதென்பது ஆண்டவரின் பிள்ளைகள் செய்யும் பெரிய காரியம் எனலாம்.*

***6. அதன் பின்பு எனக்குப் பேதுரு, யாக்கோபு, பர்னபா, தீத்து, யோவான் போன்ற பலருடன் அற்புதமான ஐக்கியம் கிடைத்தது.*** *கலாத்தியர் 1:18,19,22, 2:1, 9 ஒப்பிட்டுப் பார்க்கவும். பவுல் ஒரு அப்போஸ்தலன் என்று இந்த தேவ ஊழியர் யாவரும் ஏற்றுக்கொண்டனர். கிறிஸ்தவ ஐக்கியம் என்பது அற்புதமானது!*

*7.* ***ஆண்டவர் என்னை இரட்சித்த நிமிடம் முதல் நான் என்னால் முடிந்த வரை எவ்வளவு பேருக்கு அவரை அறிவிக்க இயலுமே அத்தனை பேருக்கும் அறிவிக்கத் தீர்மானித்துச் செயல்பட்டேன்.*** *கலாத்தியர் நிருபம் மட்டுமல்ல, இவரது மற்ற நிருபங்களைப் படிக்கும்போது, அநேக மக்களுக்குத் துரிதமாகக் கிறிஸ்துவை அறிவிக்க வேண்டுமென்ற இவரது உள்ளத்தின் பாரத்தை அறிந்து வியப்புறுவோம். 1கொரிந்தியர் 9:22 படிக்கவும்.*

## பாடம்4. நீதிமானாக்கப்படுவது விசுவாசத்தினாலா?கிரியையினாலா?

*(வேதபாடம் - ரோமர் 5:1-11)*

யோபு 25:4 இல் கேட்கப்பட்டுள்ள கேள்வி முக்கியமானது. சுபாவத்தின்படி பாவி (ரோமர் 3:10), கடவுளின் விரோதி (ரோமர் 5:10) ஆக்கினைக்குட்பட்டவன் (யோவான் 3:18), கடவுளின் கோபத்திற்குள்ளானவன் (யோவான் 3:36). இப்படிப்பட்ட மனிதன் நீதிமானாக் கப்படுவது எவ்வாறு? நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன? நீதியுள்ளவனாக மாற்றப் படுதல் எனலாம். குற்றம் சாட்டப்பட்டவன் ஆனால் எல்லாக் குற்றங்களிலிருந்தும் நீக்கப் பட்டவன். ஒரு போதும் பாவமே செய்யாத, மனிதனாக, கடவுள் நம்மைப் பார்க்கும் படியான ஒரு வழியைக் கடவுள் மனிதனுக்கென அருளியுள்ளார்.

கடவுளுக்குமுன் மனிதன் எவ்வாறு நீதிமானாக முடியும்? அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுவும் கடவுள் அருளிய வழி. மனித வரலாற்றைப் படிக்கும்போது இந்த வழிக்குப் பதிலாக மனிதன் தன் சொந்த வழியை, தவறான வழியை உருவாக்கியுள்ளான் எனக் காணலாம். அது அவனுக்குச் சரியான வழியாகத் தென்பட்டாலும் முடிவோ, ஏமாற்றமும், மரணமும்தான் - நீதிமொழிகள் 14:12 படிக்கவும். நாம் இவற்றை ஆராய்ந்து பார்ப்போம்.

***<u>1. மனிதனின் வழி</u>*** - பொய் வழி. நற்செயல்கள் செய்வது, சட்டதிட்டங்கட்குக் கீழ்ப்படிய முயல்வது அல்லது கீழ்ப்படிவது போன்றவை. 'என்னால் முடிந்த நல்லதைச் செய்தால், கடவுள் என்னை ஏற்றுக்கொள்வார்' என்று மனிதன் கருதுகிறான்.

***<u>2. கடவுளின் வழி</u>*** - மெய்வழி. கடவுள் அருளிய வழி. அதுவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேலும், அவர் செய்துமுடித்த கிரியை மீதும் வைக்கும் விசுவாச வழியாகும். அவரது மரணம், உயிர்த்தெழுதல் மூலமாக மட்டுமே நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம். 'என் குமாரன் மீதும், அவரது இரத்தத்தின் மேலும் நீங்கள் நம்பிக்கை வைக்கும் அந்த நிமிடமே உங்களை நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்கிறார் கடவுள்.

மனித வழியிலும், கடவுளின் வழியிலும் நீதிமானாவதைப் பற்றிய இரண்டு எடுத்துக்காட்டு களைப் படித்து, ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

1. ***<u>ஆதியாகமம் 4:1-7</u>*** இல் ஆண்டவருக்கென காணிக்கைக் கொண்டு வந்த இரண்டு மனிதரைப் பார்க்கின்றோம். காயீன் தனது கையின் பிரயாசத்தைக் காணிக்கை யாகக் கொடுத்தான். அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆபேல் ஒரு காணிக்கை யைக் கொண்டுவந்தான். அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. காயீனின் வழி மனிதனின் கிரியைகள். அது ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப் படவில்லை. யூதா வசனம் 11 படிக்கவும். ஆபேலின் வழி, கடவுளால் நியமிக்கப்பட்ட, இரத்தம் சிந்துதலின் வழியாகும். எபிரெயர் 9:22 பார்க்கவும்.

2. ***<u>லூக்கா 18 : 9 - 14</u>*** இல் ஆலயத்திற்கு ஜெபிக்கச் சென்ற இரண்டு மனிதரைக் குறித்துப் படிக்கின்றோம். பரிசேயன் தன்னுடைய நற்கிரியைகளைச் சார்ந்திருந்தான். ஆகவே அவன் கடவுள் முன்பு நீதிமானாக்கப் படவில்லை. ஆயக்காரனோ தன் பாவங்களைப் பற்றிய ஆழ்ந்த குற்ற உணர்வுள்ளவனாக இருந்தான். பாவியான தன் மீது கிருபை காட்டும்படி கடவுளை அவன் வேண்டினான். இவ்விதமாக அவன் ஜெபித்தது, தனக்கென இரத்தம் சிந்தின இன்னொருவர் மீது வைத்துள்ள நம்பிக்கையையும், விசுவாசத்தையும் காட்டுகிறது. 1யோவான் 4:1 பார்க்கவும். இந்த மனிதன் நீதிமானாக்கப்பட்டான். ஏனெனில் அவன் தன் சொந்த கிரியைகளைச் சார்ந்திராமல் இன்னொருவர் செய்து முடித்த செயலைச் சார்ந்திருந்தான்.

இக்காலத்திற்கும் பொருத்தமான வேதபகுதிகளே இவை எனலாம்! இக்கால மக்கள் நீதிமானாக்கப்பட்டு, கடவுள் முன் ஏற்றுக்கொள்ளப்படும்படிக்குத் தங்கள் சொந்த கிரியையைச் சார்ந்திருக்கின்றனர். அல்லது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் அவரது செய்து முடித்த செயலையும் சார்ந்துள்ளனர். இது நீதிமானாக்கப்படுவதற்கு கிரியை அல்லது விசுவாசத்தைச் சார்ந்துள்ளதைக் காட்டுகிறது. சபைக்குச் செல்லும் மக்களில் எத்தனை பேர் சபைக்குச் செல்வது, ஜெபிப்பது, தானதருமம் செய்வது, தொண்டு செய்வது போன்றவற்றைச் சார்ந்துள்ளனர். இன்னும் சிலர் பாதிரியிடம் பாவ அறிக்கை செய்வதையும், தபம் செய்வதையும், நற்கிரியைகளையும் சார்ந்துள்ளனர். இது மனித வழியேயன்றி, கடவுளால் ஏற்றுக் கொள்ளப்படாதது. நீதிமானாக்கப்படுதல் என்கிற இந்தக் காரியத்தைப்பற்றி பவுலடியார் ரோமர், கலாத்தியர் நிருபங்களில் கூறியுள்ளவற்றைப் படித்துப் பாருங்கள். நாம் கிரியையினாலே இரட்சிக்கப் படாமல், விசுவாசத்தினாலே

*இரட்சிக்கப்படுகிறோம் என்பதைத் தெளிவாகக் காணலாம். கீழேயுள்ள வசனங்களைப் படித்துத் தியானிக்கவும்.*

1. *ரோமர் 3:2022, 26,28, 4:5ஐ அப்போஸ்தலர் 13:38,30, எபேசியர் 2:8-10, தீத்து 3:5 உடன் ஒப்பிட்டுப் பார்க்க.*
2. *கலாத்தியர் 2:16, 3:6-8, 11,13,14,22,24,26*

## *1. கிரியையினாலே நீதிமானாக்கப்பட முடியாது என்பதற்குரிய மூன்று காரணங்கள்.*

1. *நம்முடைய இயல்பும், பழக்கமும் பாவமுள்ளதாக இருப்பதினால் பரிசுத்தமுள்ள கடவுள் ஏற்றுக்கொள்ளும்படியான எந்தச் செயலையும் செய்ய இயலாதவர்களாக வுள்ளோம். ஏசாயா 64:6 பார்க்கவும். கலாத்தியர் 3:10, யாக்கோபு 2:10 உடன் ஒப்பிட்டு நோக்கவும். நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வதினால் நாம் இரட்சிப்படைய முடியுமானால், நாம் அதற்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும். ஒவ்வொரு கட்டளைக்கும் பூரணக் கீழ்ப்படிதல் வேண்டும். இதை நம்மால் செய்ய செய்யவே முடியாது! நம்முடைய கையின் கிரியையால் அவரது கட்டளையை நிறைவேற்ற இயலாது. இன்று முதல் நாம் நியாயப்பிர மாணத்தைக் கைக்கொண்டால் நமது பழைய பாவங்களை நீங்குவது எப்படி? பிரசங்கி 3:15*

2. *நம்முடைய கிரியையினாலே நாம் நீதிமானாக்கப்படக் கூடுமானால் கிறிஸ்துவின் வருகையும், அவரது மரணம், இரத்தம் சிந்துதல் போன்றன தேவையில்லையே! கலாத்தியர் 2:20 இல், 'என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரன்...' என்று கூறியுள் ளதைக் காண்க. நமக்குப் பதிலாக அவர் சிலுவையில் மரித்தார். நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக் குமே என்று வசனம் 21 கூறுகிறது. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதி னால், கிரியைகளினால் நான் இரட்சிக்கப் படமுடியுமானால், ஆண்டவர் இயேசு எனக்காக ஏன் மரிக்க வேண்டும்? கலாத்தியர் 5:2,4 பார்க்க.*

3. *கிரியைகளால் நீதிமானாக்கப்படுவது என்பது கடவுளின் பண்புக்கு உகந்ததல்ல. நியாயமானதல்ல. எடுத்துக்காட்டாக இரண்டு வாலிபரை எடுத்துக் கொள்வோம். ஒருவன் தெய்வ பயமற்ற குடும்பத்திலே வளர்க்கப் பட்டு, இளம் வயது முதலே தீமை செய்யப் பழகுகிறான். மற்றவனோ தெய்வ பயமுள்ள குடும்பத்திலே வளர்க்கப்பட்டுச் சிறுவயது முதல், ஆண்டவரை நேசிக்கப் பயிற்றுவிக்கப் படுகிறான். நற்கிரியைகளினால் நீதிமானாக்கப் படுவதாக இருந்தால் இவர்கள் இருவரில் யார் நீதிமானாக்கப்படுவர்? இரண்டாம் வாலிபன்தான். இது நியாயமான முறைதானா? இல்லை. ஏனெனில் இது கடவுளின் வழியும் அல்ல.*

## *2. விசுவாசத்தாலே மட்டுமே நீதிமானாக்கப்படுகிறோம் என்பதற்கு 3 காரணங்கள்.*

1. *பாவிகளை நீதிமான்களாக்க இது கடவுள் வரையறுத்தத் திட்டமும், முறையுமாகும். மேற்கூறிய எல்லா வேதவசனங்களும் இதைத் தெளிவாகக் கூறுகின்றன. அதோடு யோவான் 3:16, 5:24, ரோமர் 1:16, 10:9,10 போன்ற வசனங்களையும் இணைத்துப் படிக்கவும். இவை எல்லாவற்றின் சாராம்சமும் கலாத்தியர் 3:11 இல் அடங்கும்! நான் நீதிமானாக்கப்பட வேண்டுமாயின் அது கடவுளின் வழியில்தான். 'தேவனே அவர்களை நீதிமானாக்குகிறவர்' (ரோமர் 8:33)*

2. *இந்தமுறை மட்டுமே கடவுளின் கிருபைக்கு ஏற்புடையதாகவுள்ளது. ரோமர் 3:24, தீத்து 3:7 இல் அவருடைய கிருபையினாலே நீதிமான்களாக் கப்படுகிறோம் என்று காண்கிறோம். கிருபை என்றால் என்ன? தகுதியற்ற பாவிகட்கு இலவசமாக, முழுமையாக அருளப்படும் கடவுளின் அளவற்ற அன்பும், இரக்கமுமே கிருபை எனப்படும். முற்றும் இலவசமாக அருளப் படுவதே கிருபையாகும். இதை விலை கொடுத்து வாங்க முடியாது, வேலை செய்து சம்பாதிக்க முடியாது. எசேக்கியேல் 2:8-10 படிக்கவும். கிரியையினாலே நீதிமானாக்கப் பட்டால் கடவுள் அருளும் கிருபை வெறுமையானதாகும்.*

3. *விசுவாச வழியாக நீதிமானாக்கப்படும் முறையே வல்லமையுள்ளது என்பதை கோடா கோடி பாவிகள் நிரூபித்துள்ளனர். அவர்கள் தங்கள் கிரியைகளைச் சார்ந்திருப்பதைத் தள்ளிவிட்டு, கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தை மட்டுமே சார்ந்திருந்து, நீதிமான்களாக் கப்பட்டனர். ரோமர் 5:1-11 வரை நீதிமானாக்கப்படுவதின் மூலம் கிட்டும் ஏழுவகைப் பயன்களை அப்போஸ்தலன் கூறியுள்ளார். அவற்றையும் பாருங்கள்!*

*நீதிமானாக்கப்படுதவதற்கும், இரட்சிப்பிற்கும் நீங்கள் எதைச் சார்ந்திருக்கிறீர்கள்? கிரியைகளையா? உங்களையா? உங்கள் முயற்சிகளையா? அல்லது உங்கள் முழு நம்பிக்கை யையும், விசுவாசத்தையும் ஆண்டவர் இயேசுவின் பேரில் மட்டுமே வைத்துள்ளீர்களா?*

# பாடம் 5. கலாத்தியர் நிருபத்தில் சிலுவை

*(வேதபாடம் - 1கொரிந்தியர் 1:17-25)*

*சிலுவை என்பதின் பொருள் என்ன? 1கொரிந்தியர் 1:18. பிலிப்பியர் 2:8, 3:18, கொலோசெயர் 1:20 படித்து ஒப்பிடுக. இது கழுத்தில் மாட்டும் அலங்கார அணி அல்ல. 'இது நமது சிலுவை' என்று பாரங்கள், கஷ்டங்களைக் குறிப்பிடுவது போன்றதல்ல. சிலுவை என்பது நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கல்வாரி மரணத்தைக் குறிப்பதாகும். இதே போன்ற இன்னொரு பதம் வேதாகமத்தில் உண்டு. அது 'இரத்தம்' என்பதாகும். எபேசியர் 2:13, 1பேதுரு 1:19, 1யோவான் 1:7 வெளிப்படுத்தல் 12:11 பார்க்கவும். நமக்காகச் சிலுவையில் ஆண்டவர் கிறிஸ்து இயேசு பலியானதைக் குறிப்பிடும் வார்த்தைகளே இவை. சிலுவை, இரத்தம் என்கிற இரண்டு பதங்கள் மாறி மாறி வருவன. இவை இரண்டும், அவரது மரணத்தையும், அந்த மரணத்தின் காரணம், நோக்கம் போன்ற யாவற்றையும் குறிப்பனவாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கி மரித்தார் என்பது வரலாற்று உண்மை. ஆனால் அவர் ஏன் சாகவேண்டும்? விசுவாசிக்கு அவரது மரணம் உணர்த்துவது என்ன? கீழேயுள்ள இந்த ஏழு வார்த்தைகளும், வேத வசனங்களும் இதற்கு விடை கூறும்.*

***<u>1. பதிலாள்</u>*** *- ஆண்டவர் இயேசு சிலுவையில் நமக்காக மரித்தது, தம்முடைய சொந்த சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சுமப்பதற்காக. இதை நாம் கலாத்தியர் 1:4 இல் பார்க்கிறோம். 'நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார் என்ற வார்த்தைகளைக் கோடிட்டுக் கொள்ளவேண்டும். நம்முடைய பாவங்கட்குத் தண்டனை உண்டு. இது மரண தண்டனையாகும். எசேக்கியேல் 18:4, ரோமர் 6:23 படிக்கவும். தண்டனைக் குரிய நாம் மரிக்காமல் இருக்க, ஆண்டவர் இயேசு நம்முடைய சார்பில் நமக்குப் பதிலாக மரித்தார். ஏசாயா 53:5,6; 2கொரிந்தியர் 5:21; 1பேதுரு 2:24 படித்து ஒப்பிட்டு நோக்குக.*

***<u>2. அடையாளம்.</u>*** *ஆண்டவர் இயேசு சிலுவையில் நமக்காக மரித்தபோது, நாமுங்கூட அவரோடு மரணமடைந்தோம். இந்த உண்மையை நாம் கலாத்தியர் 2:20 இல் காண்கிறோம். பழைய படைப்பின் மீது கடவுள் கொடுத்த தண்டனையே கிறிஸ்துவின் சிலுவை மரணம் எனலாம். ஆண்டவர் இயேசு நமது பிரதிநிதியாக (பதிலாளாக) மரித்தார். ஆகவே பழைய படைப்பின் ஒரு பகுதியாகிய நாம், அவரில் விசுவாசம் வைக்கும்போது, அவரோடு மரிக்கிறோம். இதனாலேயே அப்போஸ்தலன், சிலுவையைத் திரும்பிப் பார்த்து, 'கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன்' என்று எழுதினார். இந்த உண்மையை எவ்வளவு தெளிவாகக் கூறியுள்ளார் என்பதை ரோமர் 6 ஆம் அதிகாரத்தில் காணலாம். வசனம் 2இல், 'பாவத்துக்கு மரித்த நாம்....' எனவும், வசனம் 3இல், 'அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை...' என்றும், வசனம் 4 இல் 'கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்...' எனவும், வசனம் 5இல், 'அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டோம்' என்றும், வசனம் 6 இல் நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டானென்றும், வசனம் 11 இல் நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள் எனவும் கூறியுள்ளார். கடவுளின் சாட்சியை நாம் ஏற்று விசுவாசிக்கவேண்டும். அதாவது ஆண்டவராகிய இயேசு மரித்தபோது நாமும் மரித்தோம் என்கிற உண்மையை மனதிற் கொள்ளவேண்டும். நம்முடைய பழைய மனிதனை நாம் சாகடிக்க முடியாது. ஆனால் அதை வைத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அவரது மரணத்தின்போது நாமும் மரித்ததாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.*

***<u>3. மீட்பு:</u>*** *ஆண்டவர் இயேசு சிலுவையில் நமக்காக மரித்தபோது நம்மை நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நீங்கலாக்கி மீட்டார். கலாத்தியர் 3:13ஐ 4:4,5 உடன் ஒப்பிட்டு நோக்குக. நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நீங்கலாக்கி மீட்டார் என்பதின் பொருள் என்ன? ஏன் இந்தச் சாபம்? நியாயப் பிரமாணம் நாம் செய்ய இயலாததைச் செய்யக் கூறுகிறது. 'நீ இதைச் செய். அப்பொழுது பிழைப்பாய்... செய்யாவிட்டால் நீ சாவாய்' என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது. கலாத்தியர் 3:10 படிக்கவும். நாம் நியாயப் பிரமாணத்தை மீறி விட்டோம். ஆகவே நாம் சாபத்திற்குட்பட் டோம். இந்தச் சாபத்திலிருந்து விடுதலை செய்ய ஆண்டவர் இயேசு நமக்காக மரித்தார். நியாயப்*

*பிரமாணத்தைக் கைக் கொள்வதே இரட்சிப் பிற்கு வழி என்றிருந்திருந்தால், நாம் இரட்சிக்கப் பட்டிருக்கவே முடியாது. ஏனெனில் நம்மில் எவருமே கடவுளின் நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ளவே முடியாது. அடுத்தபடியாக நமக்கு இதனால் இரட்சிப்பின் நிச்சயம் கிட்டாது. ஏனெனில் எவ்வளவுதான் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள முயன்றாலும் வீழ்ந்துவிடுவோமோ என்ற பய உணர்வு நமக்குள்ளே இருக்கும். ஆண்டவர் நாம் செய்யும் நற்கிரியைகள், துர்கிரியைகளை எடை போடுவார். நாம் நல்ல காரியங்களை அதிகம் செய்யும்போது நம்முடைய கெட்ட காரியங்கள் மறைந்து போகும் என்று நினைப்பதுண்டு. இது தவறு. கடவுள் அப்படிச் செய்யவே மாட்டார்.*

***<u>4. பாடுகள்:</u>*** *ஆண்டவர் இயேசு சிலுவையில் அவமானமான மரணத்தை ஏற்றுக் கொண்டார். அவரைப் பின்பற்றும் யாவரும் பாடுகளை ஏற்க வேண்டும். கலாத்தியர் 5:11; 6:12 படிக்கவும். ஏனெனில் சுபாவ மனிதனுக்குச் சிலுவை என்பது இடறலானது. ஆகவே அதை விரும்புகிற யாவரும், பிரசங்கிக்கிற யாவரும் பாடுகளை அனுபவிக்க வேண்டும். அப்போஸ்தல னாகிய பவுல் கொரிந்து பட்டணத்திற்குச் சென்றிருந்த போது, சிலுவையைப் பற்றிப் போதித்தார். அது யூதருக்கு இடறலாக இருந்தது என்று நமக்குக் கூறுகிறார் (1கொரிந்தியர் 1:23). சிலுவையில் அறையுண்டு மரிப்பது என்பது மிகவும் இழிவான தண்டனையாகும். கலாத்தியர் 3:13 கூறுவதைப் பாருங்கள். ஆகவே சிலுவையுடன் அடையாளப் படுத்தப்பட்ட நாம், சிலுவையால் வரும் தண்டனையை பகிர்ந்து கொள்ளவும், பாடுபடவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.*

***<u>5. பிரிவினை:</u>*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காகச் சிலுவையில் மரித்து, பாவ சுபாவத்திலிருந்து நம்மை விடுவித்தார். இதை நாம் கலாத்தியர் 5:24இல் காண்கிறோம். இத்துடன் கலாத்தியர் 2:20ஐ ஒப்பிட்டு இவை வலியுறுத்தும் கருத்தைக் காண்க. கலாத்தியர் 2:20 இல் நிறைவேற்றி முடித்தச் செயலைப் பார்க்கிறோம். ஆனால் 5:24 இல் நாம் அன்றாடம் செய்ய வேண்டியதைப் பார்க்கிறோம். 'கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக் கிறார்கள்' - கொலோசெயர் 3:5 பார்க்கவும். எப்போதாகிலும் நீங்கள் உங்கள் அடக்க ஆராதனையைக் கண்டதுண்டா? உங்களைச் செத்தவர்களாகவும், கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்பட்டு எழுந்தவர்களாகவும், எண்ணிய துண்டா? - ரோமர் 6:3,4*

***<u>6. விடுதலை:</u>*** *ஆண்டவராகிய இயேசு சிலுவையில் மரித்து, நம்மை, இப் பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து விடுதலையாக்கினார். இங்கே நாம் கலாத்தியர் 1:4, 6:14ஐ இணைத்துக் கொண்டு விடுகிறோம். நாம் பிரித்தெடுக்கப்பட்ட மக்களாக இருக்க வேண்டுமென, ஆண்டவர் இயேசு சிலுவையில் மரித்து, நம்மை இப் பொல்லாத உலகினின்று விடுதலையாக்கி யிருக்க, நாம் உலக வழிமுறைகளை ஏற்கலாமா? உலகிற்கேற்ப உடை அணியலாமா? கேளிக்கை இடங்கட்குச் செல்லலாமா? உலக மக்களோடு நட்புக் கொள்ளலாமா? உலகம் என்பது கடவுளற்ற சமுதாயம். ஆண்டவர் இயேசுவைச் சிலுவையில் அறைந்த மக்கள் கூட்டம் இது. இதிலே அவருக்கு இடம் இல்லை. நாம் இந்த உலகிலே வாழ்கின்றோம். ஆனால் இந்த உலகிற்குரியவர்கள் அல்ல. இந்த உலகிலிருந்து நம்மைப் பிரித்து, விடுதலை யளிக்கும் வல்லமை அளிப்பது கிறிஸ்துவின் சிலுவையே! 1யோவான் 2:15-18 பார்க்கவும்.*

***<u>7. மேன்மை:</u>*** *நாம் சிலுவையைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்! இதைத் தவிர வேறெதையாவது நாம் செய்தால் கடவுள் நம்மை மன்னிப்பாராக. கலாத்தியர் 6:14.*

## *பாடம் 6. கலாத்தியர் நிருபத்தில் தூய ஆவியானவர்*

*(வேதபாடம் - கலாத்தியர் 3:1-29)*

*கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் தூய ஆவியானவர் பதின்மூன்று முறைகட்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ளார். கலாத்தியர் 3:2,3,5,14; 4:6,29; 5:5,16,17,18,22,25;6:8 பார்க்கவும். தூய ஆவியானவர் மெய்யான ஆள்த்துவம் உடையவர். அநேகர் நினைப்பது போன்று அவர் ஒரு வசீகரன சக்தியோ, பெரிய வல்லமையோ அல்ல. அப்போஸ்தலர் 1:8 இல் வல்லமை எனக் கூறப்பட்டிருப்பது இதற்குக் காரணமாயிருக்கலாம். அவர் மெய்யான ஆள்த் துவம் உடையவராக இருப்பதினால் அவர், அவருக்கு, அவரில் என்ற சொற்கள் அவரைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு ஆள் செய்கின்ற செய்கைகளையே அவரும் செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. யோவான் 14,15,16 அதிகாரங்களில் தூய ஆவியானவரைக் குறித்த வசனங் களைப் படித்துப் பாருங்கள். அங்கு அவர் செய்யும் செயல்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. தூய ஆவியானவர் ஒரு மெய்யமான ஆள்த்துவம் கொண்டவர் மட்டுமல்ல, அவர் தெய்வத்துமுள்ளவர். அவர் கடவுள். திரித்துவத்தில் மூன்றாம் ஆள். இதனால் அவர் பிதாவாகிய கடவுளையும், குமாரானாகிய கடவுளையும்விடத் தாழ்ந்தவர் என்பது பொருளல்ல. கிரமத்தின்படி மூன்றாமவர். மத்தேயு 3:16,17; 28:19; அப்போஸ்தலர் 5:3,4; 2கொரிந்தியர் 3:17;13:14 வசனங்களையும், யாத்திராகமம் 17:2-7; எபிரெயர் 3:7-9 வசனங்களையும் ஒப்பிட்டுப் படிக்கும்போது தூய ஆவியானவர் கடவுள் என்று அறியலாம்.*

*கடவுளின் பிள்ளைகட்கு, அதாவது விசுவாசிகட்கு உள்ளேயிருந்தும், அவர்களைக் கொண்டும் தூய ஆவியானவர் நடப்பிக்கும் செயல்கள் யாவை? நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத் தினால், இரட்சிப்பு நமக்குச் சொந்தமாகின்றது என்பதே கலாத்தியர் நிருபத்தின் மையக் கருத்தாகும். விசுவாசத்தின் மூலம் கிட்டுவது இது! நாம் எதை விசுவாசிக்கின்றோம்? என்ன நடக்கிறது? விசுவாசியின் வாழ்வில் தூய ஆவியானவர் நடப்பிக்கும் செயல் யாது?*

***1. தூய ஆவியானவர், விசுவாசிக்குள் 'புதுப் பிறப்பு' என்கிற அற்புதத்தை நிகழ்த்து கிறார்.*** *இதை நாம் கலாத்தியர் 4:29 இல் காண்கிறோம். இதிலே, 'மாம்சத்தின்படி பிறந்தவன்', 'ஆவியின்படி பிறந்தவன்' என இரு துருவங்களைக் காண்கிறோம். யோவான் 3:3-8 ஒப்பிடுக. குறிப்பாக வசனங்கள் 5,6 பார்க்கவும். 'புதுப்பிறப்பு' என்கிற இந்த* வலிய *அற்புதத்தை நடப்பிக்கிறவர் தூய ஆவியானவரே. நம்மைக் கிறிஸ்தவர்களாக மாற்றிக்கொள்வதோ, கடவுளின் குடும்பத்தில் இணைத்துக் கொள்வதோ நம்மால் முடியாது. ஆனால் நாம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது அவருக்குள் மறுபடியும் பிறந்து, நாம் கடவுளின் குடும்பத்தில் அங்கமாகின்றோம். யோவான் 1:12,13 படிக்கவும்.*

***2. தூய ஆவியானவர் விசுவாசிக்குள் தெய்வீக வாழ்வை அருளுகிறார்.*** *கலாத்தியர் 5:25 இல் 'நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால்' என்கிற வார்த்தைகள் நம்மை மறுபடியும் பிறந்தவர்கள் எனவும், கடவுளின் குடும்பத்தில் அங்கம் வகிப்போர் எனவும் நினைப்பூட்டுகின்றன. இந்த தெய்வீக வாழ்வை நமக்குள் தூய ஆவியானவரே அருளியுள்ளார். இயற்கை யாக நாம் பிறக்கும்போது, சரீர வாழ்வைப் பெறுகிறோம். நாம் மறுபடியும் பிறக்கும்போது, ஆவிக்குரிய வாழ்வைப் பெறுகிறோம். 1பேதுரு 1:4 படிக்கவும். கிறிஸ்தவன் என்பவன் ஒரு பக்தியுள்ள மனிதன் மட்டுமல்ல; கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற முயற்சி செய்பவன் மட்டுமல்ல; அவன் செத்த பின் உயிருடன் வாழ்பவன். சுபாவத்தின்படி நாம் ஆவிக்குரிய நிலையில் செத்தவர்கள். (எபேசியர் 2:1) ஆகவேதான் நாம் மறுபடியும் பிறந்து, புதிய வாழ்வைப் பெறவேண்டியவர்களாக வுள்ளோம். யோவான் 5:39,40; 10:10; 1யோவான் 5:11,12*

***3. தூய ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியுடனும் வாசம் செய்கிறார்.*** *கலாத்தியர் 3:2 இல் பவுலடியார் கேட்டுள்ள கேள்வி மூலம், கலாத்தியா சபையார் தூய ஆவியானவரைப் பெற்றிருந்தனர் என்று அறிகிறோம். அவர்கள் அவரைப் பெற்ற விதம் எப்படி? விசுவாசத்தின் மூலம் அவர்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்த வேளையிலே தூய ஆவியானவர் அவர்களோடு நிரந்தரமாக வாசம் செய்ய வந்து விட்டார். ஏனெனில் தூய ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் வாசம் செய்பவர். கீழ்க்கண்ட வசனங்கள் இதைத் தெளிவு படுத்தும்:*

*1. யோவான் 7:37-39; 2. யோவான் 14:16,17; 3. ரோமர் 5:5; 4. ரோமர் 8:9; 5. 1கொரிந்தியர் 6:19; 6. 1கொரிந்தியர் 12:13; 7. 1தெசலோனிக்கேயர் 4:8;*

***4. தூய ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசிக்கும், அவர்கள் பரமபிதாவின் புத்திரர் என்பதை உறுதிப்படுத்துகிறார்.*** *கலாத்தியர் 4:6 இதைக் கூறுகிறது. இவ்வசனத்தின் பிற்பகுதி, முன்னர் கூறிய கருத்தை வலியுறுத்தியுள்ளதைக் காண்க. நம்முடைய இருதயங்களில் நுழைந்த தூய ஆவியானவர் நம்மிலே நடப்பிப்பது என்ன? இந்த வசனத்தின்படியும், இதற்கொத்த ரோமர் 8:14 ஆம் வசனமும் நமக்குள்ளே அவர் நாம் கடவுளின் பிள்ளைகள் என்கிற உணர்வை உருவாக்கிக் கடவுளோடு நமக்குள்ள உறவின் நிச்சயத்தைத் தருகிறார். நாம் அவருடைய பிள்ளைகள் என்று உறுதிப்படுத்துகிறார். ஒரு சிறு குழந்தை 'அப்பா, அப்பா' என்று கூப்பிடுவதுபோல, நம்மையுங்கூட 'அப்பா, பிதாவே' என்று அழைக்கச் செய்கிறார்.*

***5. தூய ஆவியானவர், பாவம், சுயம் போன்றவைகளை மேற்கொண்டு வெற்றியுள்ள வாழ்வு நடத்த விசுவாசிக்கு வழி காட்டுகிறார்.*** *கலாத்தியர் 5:16,17 இதைக் கூறுகிறது. நாம் மறுபடியும் பிறந்தவுடனே ஒரு போராட்டம் தொடங்குகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இதைத் தம் அனுபவத்தில் கண்டவர். ரோமர் 7:18-25 வரை பார்க்கவும். பாவ சுபாவத்திலிருந்து நாம் விடுதலை பெற வழி என்ன? ஒரு விசுவாசி பாவத்தினின்றும், சுயத்தினின்றும் விடுதலையடைவது எப்படி? கீழ்க்கண்ட மூன்று காரியங்களை நாம் செய்யும் போது, தூய ஆவியானவர் நமக்கு வெற்றியளிக்கிறார்.*

1. *நாம் அவரோடு இணைந்து நடக்கும்போது - கலாத்தியர் 5:16. அவரோடு நாம் ஒருமித்துச் செல்ல வேண்டும் என்பதே இதன் பொருள் - ஆமோஸ் 3:3*
2. *நாம் அவரது வழிநடத்துதலுக்குச் செவிகொடுக்கும்போது - கலாத்தியர் 5:18 நாம் அவரது ஆளுகைக்குட்பட்டு, நம்மை அவரது கட்டுப்பாட்டிற்கென ஒப்புவிக்கும்போது, நாம் அவரது வெற்றியைக் காண்போம்.*
3. *நம்முடைய வாழ்வில் நாம் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும்போது - கலாத்தியர் 6:7,8 நம்மால் மாம்சத்திற்கென விதைக்க இயலும்; ஆவிக்கென வும் விதைக்க முடியும். ரோமர் 13:14 படிக்கவும்.*

***6. தூய ஆவியானவர், ஒரு விசுவாசியை ஆண்டவர் இயேசுவைப் போலாக்குகிறார்.*** *கலாத்தியர் 5:22,23 இல் ஆவியின் கனியைப் பார்க்கிறோம். இந்தக் கூட்டுக்கனியை நம்முடைய வாழ்வில் தூய ஆவியானவர் மட்டுமே உருவாக்க முடியும். இதை நாம் நடைமுறையில் கடைப்பிடிக்கும்போது, நாம் ஆண்டவர் இயேசுவைப் போல அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு.... போன்ற பண்புகளைக் கொண்டிருக்கத் தூய ஆவியானவர் நம்மை மாற்றுகிறார். நம்முடைய முயற்சியாலும், கடின உழைப்பாலும் நாம் இயேசுவைப் போல மாற முடியாது. ஆவியானவராலே பிறந்த நாம், ஆவியானவராலே சுத்திகரிக்கப்படுகிறோம். கலாத்தியர் 3:3 பார்க்கவும். ஒரு மரத்தில் கனி எவ்வாறு உண்டாகிறது? முயற்சியினாலோ, உழைப்பினாலோ அல்ல, கிளையானது செடியுடன் இணைக்கப்பட்டிருக்கும் போது, கொடியானது திராட்சைச் செடியுடன் ஒட்டியிருக்கும்போதுதான் மெதுவாக, ஆனால் நிச்சயமாகக் கனி தோன்றும். யோவான் 15:1-8 வரை பார்க்கவும்.*

***7. தூய ஆவியானவரே, விசுவாசியை ஊழியம் செய்ய தூண்டுபவராகவும், வல்லமையளிப்பவராகவும் இருக்கிறார்.*** *கலாத்தியர் 3:5 இல் பவுலடியார் தாம் கலாத்தியர் நடுவே வாழ்ந்து, ஊழியம் செய்தபோது, அதற்குரிய வல்லமையையும், ஊக்கத்தையும் தந்தவர் தூய ஆவியானவர் எனக் கூறுகிறார். நம்முடைய சரீர பலத்தைக் கொண்டு நாம் கடவுளுக்கு வல்லமை யான ஊழியம் செய்யவே முடியாது. ஆனால் தூய ஆவியானவரின் வல்ல மையைக் கொண்டு, பயனுள்ள ஊழியத்தை நாம் அவருக்கெனச் செய்ய முடியும். சகரியா 4:6ஐப் படித்து அப்போஸ்தலர் 1:8 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.*

## *பாடம் 7 கடவுள் தம் மைந்தனை ஏன், எப்பொழுது, எப்படிஅனுப்பினார்?*

*(வேதபாடம்: கலாத்தியர் 4:1-31)*

*நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து மனிதனாக அவதரித்தது குறித்த மூன்று உண்மைகளை கலாத்தியர் 4:4-7 வரையில் கூறியிருக்கக் காணலாம். அவரது மனித அவதாரம் குறித்த வரலாற்று உண்மைகளை மத்தேயு 1:25 -2:1; லூக்கா 2:7; யோவான் 1:1,14 இல் காணலாம். இவை ஒன்றுக்கொன்று முரண் பட்டவை அல்ல. இவற்றை சேர்த்துப் பார்த்தால் நமது ஆண்டவரின் பிறப்பு குறித்த உண்மைகளை முழுமையாக இசைந்து வெளிப்படுத்தும். நற்செய்தி யாளர்கள் தமது சுவிசேஷங்களில் ஆண்டவரின் மனித அவதாரம் குறித்த வரலாற்று உண்மைகளைக் கூறியுள்ளனர். ஆனால் பவுல் அப்போஸ்தலனோ, நமக்கு முன்பாகவுள்ள இந்த வசனங்களின் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய ஆவிக்குரிய விளக்கம் தருகிறார். இந்த வசனங்களில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள மூன்று உண்மைகளைப் பார்க்கலாம்.*

***1. மனித அவதாரத்தின் காலம்:* கடவுள் தமது மைந்தனை எப்பொழுது அனுப்பினார்.** *இது எப்பொழுது நிகழ்ந்தது? ஏரோது மன்னனின் காலத்தே நடந்தது என்கிறார் மத்தேயு (மத்தேயு 2:1). கடவுள் தமது மைந்தனை இவ் வுலகிற்கு அனுப்பி 2000 ஆண்டகட்கு மேலாகிவிட்டது என்று நாம் நமது நாட்காட்டி மூலம் அறிகிறோம். ஆனால் கலாத்தியர் 4:5 இல், 'காலம் நிறைவேறினபோது' என்று கூறப்பட்டுள்ளது. படைப்பின் போது கடவுள் ஒரு கால அட்டவணையை உருவாக்கினார். ஆதியாகமம் முதல் இரண்டு அதிகாரங்கள் இதைத் தெளிவு படுத்துகிறது. கடவுளின் படைப்பு வேலையில் திட்டம், ஒழுங்கு, முறை போன்றன உண்டு. அவரது மீட்பின் வேலையிலும் இவை உண்டு. இதன்படி அவர் தமது மைந்தனை பாவ மாம்சத்தின் சாயலாக அனுப்பி வைத்தார். இது குறித்து ரோமர் 5:6 கூறுவதைப் பாருங்கள். அப்போஸ்தலர் 2:1; யோவான் 2:4; 4:21; 5:25; 7:6; 13:1 வசனங்கள் கூறுவதையும் ஒப்பிட்டுப் பார்க்கவும். தமது மைந்தனின் மீட்பின் வேலைக்கென கடவுள் ஒவ்வொரு செயலுக்கும் காலத்தைக் குறித்து வைத்தார். இந்தக் காலத்தை நித்தியத்திலே குறித்து வைத்தார். வெளிப்படுத்தல் 13:8 பார்க்கவும். சரியான காலம் பழங்காலத்திலே முன்னு ரைக்கப்பட்டது. அதுவும் கிறிஸ்துவின் வருகைக்கு 4000 ஆண்டுகட்கு முன்பே கூறப்பட்டது. ஆதியாகமம் 3:15 பார்க்கவும். மனித முறைப்படி கூறுவதானால் இயேசு சரியான வேளையில் வந்தார். அப்பொழுது உலகம் ஒழுக்கத்திலும், ஆவிக்குரிய நிலையிலும், அரசியல் சூழலிலும், பக்தி நிலையிலும் அவரது வருகைக்கு ஆயத்தமாக இருந்தது. இப்பொழுதுங்கூட கடவுள் தமது கால அட்டவணைப்படியே செயல்பட்டு வருகிறார் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.*

***2. மனித அவதாரத்தின் தன்மை:* கடவுள் தமது மைந்தனை எவ்வாறு அனுப்பி னார்?** *கலாத்தியர் 4:4 இல் மூன்று வகையாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.*

*1. கடவுள் தமது மைந்தனை அனுப்பினார். கடவுள் முதலாவது அடியெடுத்து வைக்கிறார் - யோவான் 3:16 பார்க்கவும். ஆண்டவர் இயேசு தாமாக விரும்பி வந்தார்.-சங்கீதம் 40:7 பார்க்கவும். கிறிஸ்து மனிதனாக வரும் முன்னரே இருந்தார் என்பது தெளிவாகின்றது. கடவுள் தமது மைந்தனை அனுப்பினார் என்பதின் மூலம் அவர் எங்கேயோ இருந்து அனுப்பப் பட்டார் என்பது புலப்படுகிறது. ஏசாயா 9:6ஐ யோவான் 16:28 உடன் ஒப்பிட்டுப் பார்க்க.*

*2. ஸ்திரீயினிடத்திற் பிறந்தவர். ஆண்டவர் இயேசு ஸ்திரீயின் வித்து (ஆதியாகமம் 3:15). அவர் இப்பூவுலகிற்கு வந்தபோது அவரது தெய்வீகம் மனிதத் தன்மையால் மூடப்பட்டு அவர் தேவ மனிதனானார். அதாவது மனிதன் கடவுளாக மாறவில்லை. கடவுள் மனிதனாக மாறினார். இயேசு கிறிஸ்து நம்மைப் போன்று சாதாரண மனிதனாக இருந்திருந்தால், அவரை ஸ்திரீயின் மைந்தன் என்று கூறுவது அறிவீனமாகும். உருவாக்கப்படாமல், பெண்ணிடம் பிறக்காமல் எவராகிலும் இவ்வுலகில் அவதரிக்க முடியுமா? ஆண்டவர் இயேசுவின் பிறப்பும், அவரது ஆள்த்துவமும் வித்தியாசமானது என்பதை வெளிப்படுத்தவே இந்த சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.*

*3. நியாயப்பிரமாணத்திற்குக் கீழாகப் பிறந்தார். அவர் மனிதனாக இருந்தபோது கீழ்க் கண்ட சட்டங்கட்குக் கீழ்ப்படிந்திருந்தார்:*

1. ***சம்பிரதாயச் சட்டம்:*** *அவர் விருத்தசேதனம் பண்ணப்பட்டார். ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆலயத்தில் ஆராதித்தார். ஆலயப் பண்டிகைகளில் கலந்து கொண்டார் (லூக்கா 2:21,41,42).*
2. ***சமூகச் சட்டம்:*** *தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார் (லூக்கா 2:51)*
3. ***நாட்டுச் சட்டம்:*** *வரி செலுத்தினார் (மத்தேயு 17:24-27)*
4. ***ஒழுக்க நெறிகள்:*** *நியாயப்பிரமாணத்தை முழுவதுமாகக் கைக்கொண்டார். நியாயப் பிரமாணத்தையும், தீர்க்கதரிசனங்களையும் அழிப்பதற்கு வராமல், நிறைவேற்றவே தான் வந்துள்ளதாகக் கூறினார் - மத்தேயு 5:17. இங்கு பவுலடியார் குறிப்பிடுவது, ஒழுக்க நெறியை எனலாம். நமது ஆண்டவர் தம்மைத் தாமே நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படுத்தினார். அவர் நமது பிரதிநிதியாக வந்து அதைக் கைக்கொண்டார். நித்தியமான கடவுளின் மைந்தனான நமது ஆண்டவர், தம்மைத் தாமே தாழ்த்தி, இந்த கட்டுப் பாட்டுக்குட்படுத்தினார். தாமே ஏற்படுத்திய, அமலாக்கிய இந்த வரைமுறைகளுக்குக் கடவுளாகிய அவரே இதற்குத் தம்மைக் கீழ்ப்படுத்தினார் என்பது என்னே விந்தை! எவ்வளவாய்த் தம்மைத் தாழ்த்தினார் பாருங்கள் -பிலிப்பியர் 2:7,8 ஒப்பிட்டுப் பார்க்க.*

***3. மனித அவதாரத்தின் நோக்கம். கடவுள் ஏன் தமது மைந்தனை அனுப்பினார்?***

*நமது ஆண்டவர் இயேசு ஏன் பரலோகத்தை விட்டு பூவுலகிற்கு வந்து, பெத்லேகிமின் மாட்டுத் தொழுவில் பிறக்க வேண்டும்? இதற்கு காரணங்கள் மூன்று உண்டு. அவை கலாத்தியர் 4:5,6,7 இல் கூறப்பட்டுள்ளது.*

1. ***நம்மை மீட்க வேண்டுமென அவர் வந்தார்.*** *(வசனம் 4) எதிலிருந்து நம்மை மீட்க? இங்கு நியாயப் பிரமாணத்தின் கட்டிலிருந்து, சாபத்திலிருந்து என அறிகிறோம். நாம் நியாயப் பிரமாணத்தை மீறினதால், சாபத்திற்குரியவர்க ளாகின்றோம். அந்தச் சாபம் தண்டனை. ஆனால் கிறிஸ்து, நம்மை நியாயப் பிரமாணத்தின் தண்டனையிலிருந்து விடுவிக்க வந்தார். இதற்கென அவர் கல்வாரிச் சிலுவையில் இரத்தம் சிந்தி, தம் உயிரை ஈந்தார். 1பேதுரு 1:18,19 பார்க்க. இயேசு கிறிஸ்து நமக்காக இரத்தம் சிந்தி நம்மை மீட்டதினால் ஒவ்வொரு விசுவாசியும் கடவுளுக்கு நன்றி கூறி பாட வேண்டும்.*

2. ***நாம் குமாரனுக்குரிய எல்ல உரிமைகளையும் பெறவேண்டும் என்பதற்காக, அவர் வந்தார்.*** *(வசனம் 4) நாம் கடவுளின் பிள்ளைகளாக வேண்டும் என்பதற்காக கடவுள் இந்த மனித அவதாரம் எடுத்தார். 'நாம் புத்திர சுவிகாரத்தை அடையும் படி.....' (வசனம் 4) வந்தார். நம்முடைய புத்திர சுவிகாரம் இந்த மீட்பைப் பெறுவதினால் கிட்டுவதாகும். மனித குமாரர் யாவரும் தேவ குமாரர் ஆகும்படி அந்த தேவ குமாரனே மனித குமாரனாயினார். அப்படியானால் கடவுளின் பிள்ளைகள் யார்? புத்திர சுவிகாரத்தின் ஆவியை தங்கள் உள்ளங்களில் பெற்ற யாவரும் கடவுளின் பிள்ளைகள். கலாத்தியர் 4:6, 1யோவான் 3:1 பார்க்கவும்.*

3. ***நாம் கிறிஸ்துவின் மூலமாய் கடவுளின் சுதந்தரராவதற்கென அவர் வந்தார்.*** *(வசனம் 7) ரோமர் 8:16,17 ஒப்பிட்டு நோக்குக. நாம் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரர் என்று அங்கு காண்கிறோம். அவர் நமது மனிதத் தன்மையைப் பகிர்ந்து கொண்டதினால் பாடுகள் பல பட்டார். அதன் பயனாக, அவரது கிருபையினால், நமது விசுவாசத்தின் மூலம் நாம் அவரது மகிமையைப் பகிர்ந்து கொள்கிறோம். லூக்கா 15 ஆம் அதிகாரத்தில் தகப்பன் தன் மூத்த மகனைப் பார்த்து, 'எனக்குள்ள தெல்லாம் உன்னுடைய தாயிருக்கிறது (லூக்கா 15:31) என்று கூறியது போல, நம் பரம பிதாவும் தம் பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் கூறுகிறார்.*

- ***'மகனே' - மீட்கப் பட்டவன்.***
- ***'நீ எப்பொழுதும் என்னோடிருக்கிறாய்...' முழு உரிமை உண்டு.***
- ***'எனக்குள்ளதெல்லாம்......உன்னுடையதாயிருக்கிறது..' கடவுளின் பிள்ளையென்ற உரிமை பெற்றவன்.***

## பாடம் 8 நீங்கள் எங்கே தவறி விட்டீர்கள்?

*(வேதபாடம்: கலாத்தியர் 5:1-15)*

*உண்மையாகவே மனமாற்றம் பெற்ற ஒருவன் பின்வாங்கிப் போவது (அப்போஸ்தலர் 7:39), பின்மாற்றம் அடைவது (நீதிமொழிகள் 14:1) வெது வெதுப்பாவது (வெளிப்படுத்தல் 3:16), ஆதி அன்பை விட்டு விலகுவது (வெளிப்படுத்தல் 2:4) போன்ற நிலைக்குப் போவது மனவேதனைக்குரியது. முழுக்க முழுக்க கிறிஸ்துவுக்கென வாழ்ந்தவன், தீவிரமாக ஆத்தும ஆதாயப் பணியிலும், ஊழியத்திலும் உண்மையாக இருந்த ஒருவன் வழி விலகி ஆண்டவரை விட்டுத் தூரம் போய்விடுதல் என்பது எவ்வளவு பரிதாப மானது! கி.பி.56 ஆம் ஆண்டிலேயே கலாத்தியா சபையிலேயும் இப்படிப் பட்ட மக்கள் இருந்தனர். இவர்கள் கள்ளப் போதகர்களால் இந்நிலைக்குத் தள்ளப்பட்டனர். கள்ளப் போதகர்கள் இவர்களை மீண்டும் நியாயப் பிரமாணத்தின் கட்டுக்குள் இழுத்துச் சென்றனர். அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் 5:7 இல் இவர்களைப் பற்றிக் கூறி, இவர்களுக்காகவும் கூறுவதைப் பாருங்கள். கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு ஓட்டப் பந்தயத்திற் கொப்பானது என்ற கருத்தை இங்கு கூறுகிறார். இதே உருவகத்தைப் பவுலடியார் 1கொரிந்தியர் 9:26 இல் கூறியுள்ளார் - எபிரெயர் 12:1,2ஐ இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். ஆயினும் கலாத்தியர் 5:7 இல் நமது ஓட்டத்திற்குத் தடை ஏற்படும் என்று காண்கிறோம். இதை 'உங்கள் கீழ்ப்படிதலுக்குத் தடையாயிருப்பது யார்?' எனவும் 'உங்களை இடறப் பண்ணுகிறவர்கள் யார்?' எனவும் மொழி பெயர்க்கலாம்.*

*__1. உங்களைத் தவறச் செய்தது யாது? பெயர்க் கிறிஸ்தவர்களின் குறைபாடுள்ள சாட்சியற்ற வாழ்க்கையா?__ அப்படியானால் நீங்கள் 1பேதுரு 2:21 ஐப் பின்பற்ற வேண்டும். நீங்கள் மற்ற கிறிஸ்தவர்களை முன் மாதிரியாக் கொண்டு, அவர்களை உயரத்தில் தூக்கிவைத்து அவர்களைக் காப்பிய டிக்கிறீர்கள். நீங்கள் நினைத்தபடி அவர்கள் பரிபூரணமானவர்கள் அல்ல என்று கண்டு கொண்டபோது, நீங்கள் ஏமாற்றம் அடைந்து சோர்ந்து போய் விடுகிறீர்கள். நாம் நமக்கு, முன் மாதிரியாக வைக்கத் தகுதியுள்ளவர் ஒருவர் மாத்திரமே உண்டு. அவரே, நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து. எபிரெயர் 12:1,2 படிக்கவும். ஆம், நீங்கள் உங்களைப் பார்க்காமல், உங்கள் சூழ்நிலை களைப் பார்க்காமல், மற்ற கிறிஸ்தவர்களையும் பாராது, இயேசு ஒருவரையேப் பார்க்க வேண்டியது மிக அவசியம்.*

*__2. உங்களைத் தவறச் செய்தது யாது? துன்புறுத்தலா, தவறான கருத்தா அல்லது எதிர்ப்பா?__ அப்படியானால் நீங்கள் யோவான் 16:33ஐக் கேளுங்கள். வாலிபர் பலர் நற்செய்திக் கூட்டத்திற்குச் சென்று, கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கின்றனர். வீட்டிற்குப் போனபின்பு தவறான கருத்துக்களாலும், பெற்றோர், நண்பர்களின் எதிர்ப்பாலும், சோதனை அதிகமாகும்போது தாக்குப் பிடிக்க இயலாமல், சோர்வுற்று, பின்வாங்கிப் போகின்றனர். கிறிஸ்தவனாக வாழ்வது அவ்வளவு எளிதல்ல. ஆண்டவரும்கூட இதையே மத்தேயு 5:11,12 இல் கூறியுள்ளார். ஆண்டவர் இயேசுவும் கல்லெறிக்குத் தப்பினார் (யோவான் 8:59). அவரது தலையில் முள்முடி சூட்டினர். (யோவான் 19:1-3). அவரைக் கேலி செய்தனர் (லூக்கா 23:33-37). அவரைச் சிலுவையில் அறைந்தனர் (யோவான் 19:18) நாம் அவரோடுகூட பாடுகளை ஏற்பது நமக்குக் கிடைக்கும் சிலாக்கியம் அல்லவா? பிலிப்பியர் 1:29ஐ அப்போஸ்தலர் 5:41, 2கொரிந்தியர் 11:23-30 படித்து ஒப்பிட்டுப் பார்க்கவும்.*

*__3. உங்களைத் தவறச் செய்தது யாது? பெரிய துக்கமா? அல்லது மிகுந்த வேதனையா?__ அப்படியானால் நீங்கள் எபிரெயர் 12:6 படித்துப் பாருங்கள். நாம் முழுமையாக அவருக்கே சொந்தம் எனக் கூறும்போது, நம்மில் ஆண்டவர் நடப்பிக்கும் முதற் செயல் என்ன தெரியுமா? நாம் இதை மனப் பூர்வமாகக் கூறுகின்றோமா என்பதை அவர் சோதித்தறிகிறார்! நம் இப் பூவுலக வாழ்நாள் முழுவதும் அவர் நம்மைச் சிட்சிக்கிறார். சிட்சை என்பதின் பொருள் உங்களுக்குத் தெரியுமா? பயிற்சி, கீழ்ப்படிதல், சீர்திருத்தல், முன்னேற்றுவித்தல் என்பதே இதன் பொருள். அவர் நம் வாழ்வில் அனுமதிக்கும் சோதனைகள், துன்பங்கள் போன்றன ஏன் தெரியுமா? நம் பாரங்களை அவர்மேல் வைத்துவிட (சங்கீதம் 55:22), நாம் புடமிடப்பட (மல்கியா 3:3), நமது விசுவாசம் பலப்பட (1பேதுரு 1:7) என்பதை மறக்க வேண்டாம். நீங்கள் லூக்கா 7:23ஐ எப்போதாகிலும் கூர்ந்து நோக்கியதுண்டா? வசனங்கள் 19 முதல் 22 வரைப் படித்துப் பாருங்கள். அதோடு 1பேதுரு 2:8ஐயும் ஒப்பிட்டுப் பார்க்க.*

***<u>4. உங்களைத் தவறச் செய்தது யாது? உலகம் உங்களை இழுத்துப் போட்டதா?</u>*** *அப்படியானால் நீங்கள் 1யோவான் 2:15 படியுங்கள். ஒரே சமயத்தில் ஆண்டவர் இயேசுவையும், உலகத்தையும் நேசிக்க முடியாது. மத்தேயு 6:24 பார்க்கவும். தேமாவுக்கு நேரிட்ட இடறலும் இதுதான் (2தீமோத்தேயு 4:10). உலக ஆசையினால் அவன் ஈர்க்கப்பட்டு வீழ்ந்தான். கிறிஸ்தவர்கள் பலர் இவ்வாறே உலக ஆசையினால் ஈர்க்கப்பட்டு மூழ்கி விடுகின்றனர். சொல்லப் போனால் நம் எல்லாருக்கும் இந்த ஆசை உண்டு. தொலைத் தொடர்வழி சாதனங்கள் நம்மை வெகுவாகக் கவர்ந்தி ருக்கின்றன. நம்மை அறியாமலே நாம் இவ்வுலக வழக்கங்களில் ஈடுபட்டு, கடவுளின் பண்பாகிய நீதி, தூய்மை, உண்மை போன்றவற்றைத் தள்ளிவிடுகிறோம் - பிலிப்பியர் 4:8 படிக்கவும். இங்கு கூறப்பட்டுள்ள ஆலோசனைக்குக் கீழ்ப்படிய வகை தேடுங்கள். நீதிமொழிகள் 23:7 ஒப்பிட்டுப் படிக்கவும்.*

***<u>5. உங்களைத் தவறச் செய்தது யாது? ஆண்டவரோடுள்ள ஐக்கியத்ததைப் புறக்கணித்து விட்டதாலா?</u>*** *அப்படியானால் நீங்கள் யோவான் 15:4 கட்டாயம் படிக்க வேண்டும். நிலைத்திருத்தல் என்பது இணைக்கப் பட்டிருப்பதாகும். கிறிஸ்தவர்கள் பலர் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்குப் பதிலாகப் பின்வாங்கிப் போய்விடுகின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் கடவுளின் வார்த்தையைப் படித்துத் தியானிப்பதில்லை (2தீமோத்தேயு 3:15-17). கடவுளின் ஆலயத்திற்குத் தவறாமல் செல்வதில்லை (எபிரெயர் 10:25). இவ்வாறு அவர்கள் இவைகளைப் புறக்கணிப்பதினால், அவர்கள் ஆவிக் குரிய வாழ்வில் வளர்வதில்லை. முன்னேற முடிவதில்லை (2பேதுரு 3:18).*

***<u>6. உங்களைத் தவறச் செய்தது யாது? அறிந்தும் கீழ்ப்படியாமற் போன செயலா?</u>*** *அப்படியானால் நீங்கள் எரேமியா 26:13க்குச் செவி சாய்க்க வேண்டும். அதைப் பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை, பேசிப் பிரயோசனம் ஏதுமில்லை - அதற்காக ஜெபம் செய்வதிலும் எவ்விதப் பலனுமில்லை, செய்ய வேண்டியது இதுதான்: 'உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்படுத்தி.... உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேளுங்கள்....' உங்கள் வாழ்வில் தவறானவை என அறிந்தும், அவற்றையே செய்வது நன் றல்ல. ஒரு வேளை தவறான நட்பாக இருக்கலாம் (ஆமோஸ் 3:3), தவறான உறவாக இருக்கலாம் (2கொரிந்தியர் 6:14), இரகசியமானப் பாவமாக இருக்கலாம் (யோசுவா 7:18-23), அசுத்தமான ஏதோ ஒன்றாக இருக்கலாம் (ஏசாயா 52:11), மன்னிக்காத பண்பாக இருக்கலாம் (மத்தேயு 18:21,22) அல்லது நிறைவேற்ற இயலாத பொருத்தனையாக இருக்கலாம் (உபாகமம் 23:21). எதுவாயினும் சரி. பரிகாரம் நீதிமொழிகள் 28:13 படித்து, சங்கீதம் 66:18ஐ ஒப்பிடுக. கீழ்ப்படிதலுக்குக் கலாத்தியர் 5:7 படிக்கவும்.*

***<u>7. உங்களைத் தவறச் செய்தது யாது? வேறு ஏதாகிலும் காரணமா?</u>*** *அப்படியானால், நீங்கள் எபிரெயர் 10:25 படித்துப் பாருங்கள். உங்களுக்கு ஆண்டவரிடம் திரும்பி வரவேண்டும் என்கிற வாஞ்சை இருக்குமாயின், இது ஆண்டவருக்கு முன்பாக, உண்மையான தீர்மானமாக இருந்தால், உங்கள் வாழ்வில் தடையாக இருக்கும் அந்தக் காரியத்தை ஆண்டவர் தம் கைவிரலால் சுட்டிக்காட்டுவார். அவர் அப்படிக் காட்டும்போது நீங்கள் அவற்றைச் சரி செய்ய ஆயத்தமாக இருந்து, கீழ்ப்படிய வேண்டும். யோவான் 2:5 படிக்கவும்.*

*உங்களைத் தவறச் செய்தது யாது? கடவுளை மகிமைப் படுத்தும் வாழ்வு எது, மற்றவர்களைப் பிரியப்படுத்தும் வாழ்வு எது நமக்கு நிறைவைத் தரும் வாழ்வு எது தெரியுமா? அதுவே நன்றாக ஓடக் கூடிய வாழ்க்கை. அதுவே சத்தியத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படியும் வாழ்க்கை. ஆண்டவர் இயேசுவே அந்தச் சத்தியம் (யோவான் 14:6) அவரது வார்த்தையும் சத்தியம். அது சத்திய வசனமாகும் (2தீமோத்தேயு2:15). சத்தியத் திற்கு கீழ்ப்படிய வகை தேடுங்கள்.*

# பாடம் 9 பாவ இயல்பும் தூய ஆவியானவரும்

*(வேதபாடம்: கலாத்தியர் 5:16-26)*

*'பாழானச் சேரியிலிருந்து, பழமுதிர் சோலைக்கு' என்ற தலைப்பில் காலஞ் சென்ற போதகர் கேனன் கய்கிங், கலாத்தியர் 5:19-23ஐ மையமாக வைத்துப் பிரசங்கம் செய்வதுண்டு. (வசனங்கள் 19-21 வரை சேரியையும், வசனங்கள் 22,23 பழச் சோலையையும் குறிக்கும்). இயல்பின்படி சேரிவாழ் மக்களைப் போன்றுள்ள நம்மைப் பழமுதிர் சோலைக் குப் பங்காளிகளாக்குவது கடவுளின் நோக்கமும், செயல்பாடுமாகும். அதாவது தீமையே செய்யப் பழகின நாம் கிறிஸ்து இயேசுவில் புது வாழ்வு பெற்று, ஆவியானவர் அருளும் கனியை வெளிப்படுத்துகிறோம். கலாத்தியர் 5:16-26 வரை ஒரு விசுவாசியின் வாழ்வு, இருவகைத் தன்மையுடையது எனவும், இதிலிருந்து படிப்படியாக அவன் எவ்வாறு முன்னேறி வருகிறான் என்றும் கூறுகிறது. இந்த முக்கியமான கருத்தை நாம் ஆழ்ந்து சிந்திக்கலாம்.*

*<u>1. நாம் மறுபடியும் பிறந்து கிறிஸ்தவர்களாகும் முன்னர், பாவ இயல்புள்ளோராயும், வீழ்ந்துபோனவர்களாயும், சீரழிந்தோராயும் இருந்தோம்.</u> இதுவே மாம்ச இச்சை, மாம்சத்தின் கிரியையென வசனம் 16,17,19,24 இல் கூறப்பட்டுள்ளது. இரட்சிப்படையாத மனித இயல்பைக் குறிக்க, வேதாகமம் கூறும் சொற்கள் இவையே! இந்தப் பாவ சுபாவத்தை நம்முடைய பழைய மனிதன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் ரோமர் 6:6 இல் காண்கிறோம். எபேசியர் 4:22, கொலோசெயர் 3:9 இலும் இதைக் காணலாம். இந்தப் பாவ இயல்பு சீர்கெட்டது. இதை நாம் சீர்திருத்த இயலாது. ரோமர் 7:18; ஆதியாகமம் 6:5,11,12; ஏசாயா 1:5,6; எரேமியா 17:9; மத்தேயு 7:21,22,23; ரோமர் 1:26-32; 2தீமோத்தேயு 3:1-7 வரை படித்துப் பார்க்கவும்.*

*<u>2. நாம் மறுபடியும் பிறக்கும்போது புதிய இயல்பையும், ஆவிக்குரிய சுபாவத்தையும் பெறுகிறோம்.</u> இதனைத் தூய ஆவியானவர் நமக்குள் அருளுகிறார். இதனைப் 'புதிய மனிதன்' என்று கூறியிருக்கக் காணலாம். எபேசியர் 4:24; கொலோசெயர் 3:10 பார்க்கவும். நாம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது நாம் இந்தத் தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுகிறோம். இது எவ்வளவு விந்தையானது! ஆம் நாம் கடவுளின் வாழ்வைப் பெற்று அதிலே அங்கமாகின்றோம்.*

*<u>3. ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பழையது, புதியது என்கிற இரண்டு இயல்புகள் உண்டு.</u> மறுபடியும் பிறந்தவர்கள் யாவரும் தாங்கள் ஆதாமிட மிருந்து பெற்ற அந்தப் பாவ இயல்பைக் கொண்டுள்ளனர். அதே வேளையில் அவர்கள் மறுபடியும் பிறந்த அனுபவத்தையும், தெய்வீக சுபாவத்தையும் பெறுகின்றனர். யோவான் 3:6 பார்க்கவும். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும் இந்த இரு இயல்புகளும் சேர்ந்தே இருக்கும். நாம் மறுபடியும் பிறக்கும்போது, புதிய இயல்பைப் பெறுகிறோம். ஆனால் நாம் ஆண்டவரைக் காணும் வரை நாம் அவரைப் போல் மாறும் வரை நம் முடைய பழைய இயல்பை இழக்கமாட்டோம் என்பதை நினைவிற் கொள்க. 1யோவான் 3:2 பார்க்க. பழைய இயல்பை மாற்றவோ, சீர்திருத்தவோ முடியாது. அதை நீக்குவதும் கடினமே. ஆனால் நாம் அதை வெற்றி கொள்ளமுடியும்.. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும் பழைய, கெட்டுச் சீரழிந்த ஆதாமின் சுபாவமும், புதிய தெய்வீகச் சுபாவமும் கூடவே இருக்குமென்பது உண்மையே.*

*<u>4. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும் இந்த இரண்டு சுபாவங்களும் சேர்ந்து இருந்தாலும், அவை இரண்டும் வேறுபட்டவை.</u> இந்த முரண்பாட்டால், தொடர்ந்து இவை இரண்டும் மோதிக்கொள்ளும். ஒன்று நல்லது. மற்றொன்று கெட்டது. ஒன்று அசுத்தமானது. மற்றது தூய்மையானது. ஒன்று முதலாம் ஆதாமிடமிருந்து வந்தது. மற்றது கடைசி ஆதாமிட மிருந்து கிடைத்தது. இந்த இரண்டிற்கும் தொடர்ந்து போராட்டம் உண்டு. வசனம் 17ஐப் பாருங்கள். இங்கு ஒவ்வொரு கிறிஸ்தவனின் அனுபவத்தில் நடப்பதை எவ்வளவு தெளிவாகக் கூறுகிறது. ரோமர் 7:18-24; கலாத்தியர் 5:17ஐ ஒப்பிட்டுப் படிக்கவும்.*

***5. நாம் இந்த பழைய இயல்பை அதன் இழிவான செயல்களைக் கொண்டு கண்டறியலாம்.*** வசனங்கள் 19-21 வரை இதைப் பார்க்கலாம். பாவ சுபாவத்தின் செயல்பாட்டை இது விளக்குகிறது.

1. இங்கு 'கிரியைகள்' என்கிற பதம் (வசனம் 19) கூறப்பட்டுள்ளது. இது பன்மை. இது பாவ இயல்பின் முயற்சிகளையும், செயல்பாட்டினையும் கூறுகிறது.

2. இங்கு 'வெளியரங்கமாயிருக்கின்றன' என்கிற பதம் உள்ளது. அப்போஸ் தலன், பாவ சுபாவத்தின் செயல்கள் அப்பட்டமாக உள்ளது என்கிறார். நம்முடைய உள்ளத்தை நாமேதான் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

3. இங்கு அப்போஸ்தலன் கூறும் பாவ இயல்பின் செயல்களைப் பற்றிக்கூறும் பட்டியல் முடிவடையவில்லை. பட்டியலிட்டுப் பாவ இயல்பின் கிரியைகளைக் கூறிய பவுலடியார் முடிக்காமல் 'முதலானவைகள்' (வசனம் 21) என்று தொடருகிறார்.

நாம் யாவரும் பாவ இயல்புள்ளவர்களாக இருப்பதினால் நாம் இந்தச் செயல்களில் ஒன்றையோ அல்லது யாவற்றையுமே செய்யக்கூடியவர்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இவையாவும் பாவ இச்சையின் செயல்கள். நமக்குள்ளே இந்தப் பாவ இயல்பு குடி கொண்டுள்ளது. கடவுள் ஏன் இந்தப் பழைய சுபாவத்தைக் குறை கூறுகிறார் என்று இப்பொழுது தெரிகிறதா? - கலாத்தியர் 5:21 படிக்கவும்.

***6. கிறிஸ்தவனுக்குள் இந்தப் புதிய சுபாவத்தை அருளிய தூய ஆவியானவரே இந்தப் புதிய இயல்பின் வெளிப்பாடான 'ஆவியின் கனியை' அருளுகிறார்.*** 'கனி' என்றுதான் கூறப்பட்டுள்ளது. கனிகள் அல்ல. ஒருமையேயன்றி பன்மையல்ல. தூய ஆவியானவர் கிறிஸ்தவனுக்குள்ளிருந்து, கிறிஸ்தவன் மூலமாக முழுமையான இக்கனியை உருவாக்குகிறார். வசனம் 22 இல் 'கனியோ' என்று ஆரம்பிக்கின்றார். இது 'மாம்சத்தின் கிரியைகட்கும்' 'ஆவியின் கனிக்கும்' நடுவேயுள்ளது. இதன் பொருள் என்ன? தூய ஆவியானவர் மட்டுமே ஒரு கிறிஸ்தவனில், கிறிஸ்துவின் சாயலை, ஆவியின் கனியை உருவாக்க முடியும்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆண்டவர் இயேசுவைப்போல மாற வாஞ்சிக்கிறான். இது எவ்வாறு நடக்கும்? தூய ஆவியானவர் மட்டுமே ஆவியின் கனியை உருவாக்க இயலும். 1. தூய ஆவியானவர் நம்மை அன்புள்ளவர் களாக மாற்றுகிறார் (5:5), மகிழ்ச்சியுள்ளோராகவும் (அப்போஸ்தலர் 13:52; யோவான் 15:11) அமைதியும், சமாதானமும் உள்ளோராகவும் (பிலிப்பியர் 4:6,7) பொறுமை யுள்ளோராகவும் (1பேதுரு 2:20-23), தயவும் (எபேசியர் 4:30-32), நற்குணமுடையோராயும் (அப்போஸ்தலர் 11:24), விசுவாசமுள் ளோராயும் (1கொரிந்தியர் 4:2), சாந்தமுடையோராயும் (மத்தேயு 11:25), நம்மை அடக்கியாள்வோராயும் (ரோமர் 8:2) மாற்றியமைக்கிறார். நம்முடைய சொந்த முயற்சியால், சொந்த பலத்தினால், கிறிஸ்துவின் சாயலான, கிறிஸ்துவின் பண்பான இந்த அழகான கனியை நம்மால் உருவாக்கவே முடியாது. நம்முடைய சொந்த முயற்சியாலோ, பலத்தினாலோ, பாவ சுபாவத்தின் செயல்களை அழித்துப் போடவோ, வெற்றி கொள்ளவோ முடியாது. அப்படியானால் நாம் இதனை மேற்கொள்வது எப்படி?

***7. பாவ சுபாவத்தின் இடத்தை ஆவியின் கனி எடுத்துக் கொள்வது எப்படி?*** நமக்குள்ளே தீமை செய்யத் துடிக்கும் ஒரு இயல்பும், கிறிஸ்துவைப் போன்று மாற நம்மிலே தூய ஆவியானவர் உருவாக்கும் புதிய சுபாவமும் உள்ளன. நாம் பாவ சுபாவத்திலிருந்து விடுதலை பெற்று, நம்மிலே ஆவியின் கனி வெளிப்பட என்ன செய்யவேண்டும்? இதோ இதற்கென மூன்று இரகசியங்கள் உண்டு.

1. ***எண்ணிக்கொள்ளுங்கள்:*** - வசனம் 24. இதன்பொருள் என்ன? ரோமர் 6:11 இல் கூறப்பட்டுள்ளதற்கு கீழ்ப்படியுங்கள் - அதுவும் விசுவாசத்தினாலே - கலாத்தியர் 2:20
2. ***சார்ந்திருங்கள்:*** வசனம் 18. நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல. கிரியையினாலே, முயற்சியினாலே, மாம்ச இச்சைகளை வெல்லவும், ஆவியின் கனியைப் பெறவும் முடியாது. இதை ஆவியானவர் மட்டுமே அருள முடியும். ஆகவே அவரைச் சார்ந்திருங்கள். அவரே வெற்றிபெற வழி நடத்துவார்.
3. ***பெற்றுக் கொள்ளுங்கள்:*** வசனம் 16. ஆவிக்கேற்றபடி நடப்பது என்பது நம் ஐக்கியத்தைக் குறிக்கும். அவரைத் துக்கப்படுத்தவும் முடியும். எபேசியர் 4:30. அவரில் நிறைவைக் காணவும் முடியும் - எபேசியர் 5:18.

## பாடம் 10 நமது திட்டம், ஆபத்து, எதிர்பார்ப்பு

*(வேதபாடம்: கலாத்தியர் 6:1-9)*

*கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ ஊழியர் என்றழைக்கப்படும் நமக்கு வரும் பெரிய ஆபத்து எதுவென்றால், அதுதான் வெற்றிக்கென முன்னேறிச் செல்வதற்குப் பதிலாகச் சோர்ந்து போய்விடுவது எனலாம். இதைப்பற்றி நாம் இந்தத் தொடரின் கடைசிப் பாடத்தில் படிக்கப் போகிறோம். இந்த அபாயத்தைக் குறித்து, அப்போஸ்தலன் கலாத்தியர் 6:9 இல் கூறியுள்ளார். இந்தப் பெரிய ஆபத்தைக் குறித்தும், அதின் வல்லமை குறித்தும் அறிய வசனம் முழுவதையும் ஆராய்வது நன்று.*

### 1. ஆண்டவரின் ஊழியராகிய நமது திட்டம்.

*கிறிஸ்தவர்களாக, அவரது ஊழியராக நாம் ஆண்டவருக்கெனச் செய்ய வேண்டிய வேலை என்ன? நமது பணி என்ன? கலாத்தியர் 6:9 இல் கிறிஸ்தவர்களின் தொண்டு குறித்த இரண்டு வார்த்தைகளைப் பார்க்கலாம். நன்மை செய்வது என்பதே அவை. அப்போஸ்தலர் 10:38ஐப் படித்து, யோவான் 20:21 ஒப்பிடுக. 1பேதுரு 3:17 இல் நன்மை செய்தல் என்பதற்குப் பதிலாகத் 'தீமை செய்து' என்ற முரணான சொற்கள் இருப்பதைப் பார்க்கிறோம். எபேசியர் 2:10 இல் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் உண்டாக்கப் பட்டுள்ளோம் என்று காணலாம். நன்மை செய்வதினால் எவருமே இரட்சிக்கப் படுவதில்லை. (எபேசியர் 2:8, தீத்து 3:5) ஆனால் இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு வரும் தங்கள் இரட்சிப்பை நன்மை செய்வதின் மூலம் உறுதிப்படுத்துகின்றனர் (தீத்து 3:8). நன்மை செய்வது என்றால் என்ன? கிறிஸ்துவுக்காக நாம் செய்யும் ஒவ்வொரு சிறிய, பெரிய தொண்டுகள் யாவும் எனலாம். பிரசங்கம், போதனை, வீடு சந்திப்பு போன்ற கிறிஸ்தவ ஊழியங்கள் போன்றவற்றின் பட்டிய ல் இதுவும் அடங்கும். பெற்றோர் ஆராதனையில் கலந்து கொள்ளும்போது அவர்களின் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வதும் ஒரு ஊழியமே. ஆண்டவரின் பெயரால் ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் தருவதும் ஒரு வகை ஊழியமே (மத்தேயு 10:42). நன்மை செய்வதின் நோக்கம் என்ன? இந்தக் கலாத்தியர் நிருபத்தின் ஆறாம் அதிகாரத்தில் செய்ய வேண்டிய சில சிறப்பான நன்மைகளைக் காணலாம்.*

1. *<u>மற்றவர்களுக்கு ஆவிக்குரிய வாழ்வில் உதவிசெய்தல் (வசனம்1)</u> நமது சகோதரரோ, சகோதரிகளோ ஆவிக்குரிய வாழ்வில் துன்பப்படும்போது நாம் பலமுறை அவர்களைக் குறை கூறியுள்ளோம். ஒதுக்கி வைத்துள்ளோம். இதற்கென வசனம் 1 கூறும் ஆலோசனை களைக் கேளுங்கள். யோவான் 13:12-15 வரைப் பாருங்கள்.*
2. *<u>மற்றவர்களின் பாரத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் (வசனம் 2)</u> இதைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? நாம் யாவரும் ஈடுபடக்கூடிய பெரிய ஊழியம் இது. அப்போஸ்தலர் 20:35, 1தெசலோனிக்கேயர் 5:14 படிக்கவும். கிறிஸ்தவர்களுக் குள்ளே எப்பொழுதுமே இரக்க உணர்வு உண்டு. அதுவும் குறிப்பாக இதை இன்னல், துன்பம், சோதனை வேளைகளில் அதிகமாகக் காணலாம்.*
3. *<u>பிறருடன் நமக்குள்ளவற்றைப் பகிர்ந்து கொள்ளல் (வசனம் 6)</u> ஆண்டவரிடமிருந்து நாம் அதிகமாகப் பெற்றுக் கொண்டதை, அது ஆவிக்குரி யதாக இருந்தாலும், பூமிக்குரிய ஆசீர்வாதங்களாயினும், நம்மைச் சுற்றிலும் தேவையில் வாழும் மக்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போஸ்தலர் 2:44, 4:32, 2கொரிந்தியர் 9:7-15, 1தீமோத்தேயு 5:18 பார்க்கவும்.*
4. *<u>நன்மையே செய்தல் (வசனம் 10)</u> இந்த ஊழியத்தைச் செய்ய நமக்கு எவ்வளவோ வாய்ப்புகள் குவிந்துள்ளன! மற்றவர்கட்கு நன்மை செய்யும்போது நமக்கே நன்மை விளையும். நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தாலன்றி இந்த ஊழியத்தில் ஈடுபட இயலாது. நீதிமொழிகள் 11:24,25பார்க்க.*
5. *<u>விசுவாசக் குடும்பத்தாருக்கெனச் செய்யும் சிறப்பான நன்மைகள்(வசனம் 10)</u> கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகளுக்கு நாம் செய்வது நமக்குக் கிடைத்தச் சிறப்பான ஆசீர்வாதமாகும். பி ப்பியர் 4:10, 14-18 வரை படிக்கவும்.*

### 2. ஆண்டவரின் ஊழியராகிய நமக்கு வரும் ஆபத்துக்கள்.

நமக்கு வரும் ஆபத்துக்கள் எவை? நாம் ஊழியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது சோர்வும், களைப்பும் ஏற்படும். எடுத்துக்காட்டாக, நீங்கள் ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியராக இருந்தால் எவ்வளவு சீக்கிரமாக நம்பிக்கை இழந்து விடுகிறீர்களென அறிவீர்கள்! நாம் நன்மை செய்வதில் சோர்வடையாதிருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நேரிடும் விசித்திரமான ஆபத்து இது எனலாம். பவுலுங்கூட, கலாத்தியருக்கு எழுதும்போது தன்னையும் இந்த அனுபவத்திற்குள் இணைத்துக் கொண்டு, 'சோர்ந்து போகாமல் இருப்போமாக' என்கிறார். நாம் ஏன் சோர்வடைந்து களைத்துப் போகின்றோம்? கிறிஸ்தவர்கள் ஆண்டவரின் பணியில் சோர்ந்து போவதற்குரிய காரணங்கள் பல உண்டு. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

1. <u>வேலைப் பளு மிகுதியினால் சோர்வு இருக்கலாம்</u>. நாம் நன்மை செய்வதில் அதிகமாக ஈடுபடுவதில்லை. நாம் ஞானத்தோடும், கொஞ்சமாகச் செய்தாலும் நன்றாகச் செய்ய வேண்டும். முடியாது எனக் கூறுவதற்கு அதிகமான கிருபை தேவை. முடியும் என்று கூறுவதற்கோ அதைவிட அதிகமான கிருபை தேவை. சுறுசுறுப்பாக இருந்து பலனற்றுப் போவோர் பலர் உண்டு.
2. <u>நல்ல காற்றோட்டமில்லாமல் இருப்பது களைப்புக்கும், சோர்வுக்கும் காரணமாக இருக்கலாம்.</u> ஜன்னல், கதவுகளை இறுக மூடி ஒரு அறையினுள் படுத்துக் கொண்டால் எப்படி இருக்கும்? போதுமான அளவு காற்றோட்டம் இல்லாமல் களைத்துப் போவோம். கிறிஸ்தவர்களின் மூச்சுக்காற்று ஜெபமாகும். இது நமக்கு இன்றியமையாதது. எப்பொழுதும் நம்முடைய சோர்வுக்குக் காரணம் நம் ஜெபக் குறைவு எனலாம். லூக்கா 18:1 பார்க்க.
3. <u>உணவுக் குறைவும் காரணமாக இருக்கலாம். உணவு இன்றி நம் உடல் சுருண்டு விடுவதுபோல ஆவிக்குரிய உணவு இல்லாமல் ஆவிக்குரிய வாழ்வு வீழ்ச்சியடையும்.</u> நன்மை செய்வது என்பது நாம் வெளியே கொடுப்பது. முதலாவது நீங்கள் உள்ளே எடுத்தக் கொண்டாலன்றி வெளியே கொடுக்க முடியாது. நாம் கடவுளின் வார்த்தை என்கிற ஆவிக்குரிய உணவைத் தவிர்க்கக் கூடாது. யோபு 23:12.
4. <u>போதுமான தூக்கமின்மை காரணமாக இருக்கலாம்.</u> கடவுளின் வாக்குத் தத்தங்களைச் சார்ந்து கவலையின்றி இருப்பது நன்று. இதைச் செய்யத் தவறும் போது நாம் சோர்வடைந்து, களைத்துப் போகின்றோம். சங்கீதம் 119:165, ஏசாயா 26:3 பார்க்கவும்.
5. <u>இன்னொரு முக்கிய காரணம் பயம் எனலாம்</u>. இதைக் கொண்டுவருவது பிசாசு எனலாம். உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள் என்று ஒருவர் இதை மொழி பெயர்த்துள்ளார். நீங்கள் தைரியத்தை இழந்து விட்டீர்களா? 1சாமுவேல் 30:6 படிக்கவும்!

## <u>3. ஆண்டவரின் ஊழியராகிய நமது எதிர்பார்ப்பு</u>

நமது எதிர்பார்ப்பு என்ன? நாம் ஏற்ற காலத்தில் அறுப்போம். எவ்வளவு நிச்சயமான வார்த்தைகள் இவை! ஆண்டவருக்கென, ஆண்டவருக்காக செய்த எந்த வேலையும் பலனின்றிப் போனதில்லை. வீணாகப் போனதுமில்லை. சங்கீதம் 126:6 பார்க்கவும். 'தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்' என்ற வார்த்தைகள் இதைத்தான் குறிக்கின்றன. பிரசங்கி 11:1 இல் 'பலனைக் காண்பாய்' என்றுள்ளது. 1கொரிந்தியர் 15:58 இல் 'அறிந்து' என்ற பதத்தினைக் கவனிக்கவும்.

நாம் களைப்படைந்து சோர்ந்து போகாதிருக்க நமக்குப் பாதுகாப்புக் கவசம் எது? ஏசாயா 40:28-31, எபிரெயர் 12:3 பார்க்கவும். கடவுள் நமக்களித்தத் திட்டத்திற்குள் முழுமனதோடு ஈடுபட, தொடர்ந்து வரும் ஆபத்துகட்குத் தப்ப, நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஒளிமயமான எதிர்காலத்தின் ஒளியில் நடக்கக் கடவுள்தாமே நமக்குக் கிருபை அருள்வாராக.

***'ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிருபையிலே எப்பொழுதும் பெருகுகிறவர் களாயும் இருப்பீர்களாக'. (1கொரிந்தியர் 15:58).***